REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஓகஸ்ட் 31 செவ்வாய்க்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 89 இல. 206 | Tuesday 31, August, 2021 | 24பக்கங்கள் | 30/-

60 வயதுக்கு மேற்பட்ட சகலரும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவும்

சர்வ மதத் தலைவர்கள் கூட்டாக மக்களிடம் வேண்டுகோள்

இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்ட சகலரும் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும் என சர்வ மதத் தலை வர்கள் 08

நாட்டுக்கு தங்கப்பதக்கம் பெற்றுக்கொடுத்த

உலக சாதனை வீரருக்கு பிரதமர் மஹிந்த பாராட்டு

டோக்கியோ பரா ஒலிம்பிக்கில் ஈட்டி எறிதல் போட்டியில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்றுக் கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத் வீரருக்கு மன மார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது 08

டோக்கியோ பராலிம்பிக்கில் இலங்கைக்கு தங்கப் பதக்கம்

ஈட்டி எறிதலில் உலக சாதனையும் நிகழ்த்தினார் தினேஷ் பிரியந்த ஹேரத்

டோக்கியோ பராலிம்பிக் ஈட்டி எறிதல் F46 போட்டியில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று இலங்கையின் தினேஷ் பிரியந்த ஹேரத் புதிய வரலாறு படைத்தார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், மாற்றுத்திறனாளிகளுக்கான 08

இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை:

ஜெனிவாவில் சாதக தீர்வு எட்டப்படும்

உலக நாடுகளுக்கு விளக்கமளிக்கப்படுவதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று தெரிவிப்பு

உலக நாடுகளில் பல பிரச்சினைகள் உள்ளபோதும் இலங்கை பிரச்சினையை மட்டுமே ஒவ்வொரு வருடமும் முன்னெடுப்பது குறித்தும் விசனம்!

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் ஒவ்வொரு வருடமும் இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. எனவே எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை மற்றும் ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தொடரில் இலங்கை விவகாரத்தில் சாதகமான தீர்வு எட்டப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த சில வாரங்களாக சர்வதேச ரீதியில் இலங்கைக்கு மிக முக்கியமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவருகின்றன. எமது நிலைப்பாடு பற்றி நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். அந்தநாடுகளிலுள்ள இலங்கையின் தூதுவர்களான மொஹான் பீரிஸ் மற்றும் சி.ஏ சந்திரபிரேம ஆகியோர் மூலமாக இந்தத் தெளிவுபடுத்தலை செய்துள்ளோம். இதற்கு மேலதிகமாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதவர்களை தனித்தனியாக சந்தித்து ஜெனீவா கூட்டத்தொடருக்குத் தொடர்புடைய 08

நாளை முதல் சிவப்பு சீனி கிலோ ரூ.130க்கு விற்பனை

வெள்ளை சீனியின் விலையை குறைக்க நடவடிக்கை

03

அனுமதியின்றி இயங்கிய களஞ்சியசாலை முற்றுகை:

4,100 மெ.தொன் சீனி மீட்கப்பட்டது

வத்தளை கெரவலபிட்டியவில் சம்பவம்

நுகர்வோர் அதிகாரசபை அதிரடி நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மேலும் 4,100 மெற்றிக் தொன் சீனி மீட்கப்பட்டுள்ளது.

வத்தளை கெரவலப்பிட்டி பகுதியில் மறைவாக 08

இலங்கை தமிழர்களுக்கான அறிவிப்புகள்:

தமிழக முதல்வருக்கு தனது நன்றியை தெரிவித்த செந்தில்

தொலைபேசியில் உரையாடி வாழ்த்தினார்

இலங்கை தமிழர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலான அறிவிப்புகளுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 08

புலம்பெயர் தமிழரை மீள நாட்டுக்கு வரவேற்பது தொடர்பான

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கருத்துக்கு மனோ MPயின் பதில் சிறுபிள்ளைத்தனமானது

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்காக அவர் செய்தது என்ன?

நமது நிருபர்

நாடு திரும்ப விருப்பம் கொண்டுள்ள புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் தொடர்பாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவிட்ட கருத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் முகநூல் மற்றும் டுவிட்டரில் பதில் பதிவுகள் சிறுபிள்ளைத்தனமாக உள்ளதென்று புதிய ஜனநாயக மக்கள் 08

புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ரவிக்குமார் கடும் கண்டனம்

நுவரெலியாவில் 26,690 பேருக்கு ரூ.2000 கொடுப்பனவு

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் 26,690 பேருக்கு 2,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் 08

ஐ.தே.க முன்னாள் எம்.பி டியூட்டர் கொவிட்டுக்கு பலி

ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டியூட்டர் குணசேகர கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். அவர் உயிரிழக்கும் போது அவருக்கு வயது 86 ஆகும்.

முன்னாள் ஜனாதிபதி 08

கர்ப்பிணி தாய்மாரில்

75 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நிறைவு

- Dr.சித்ரமாலி டி சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் 75 வீதமான கர்ப்பிணித் தாய்மாருக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளதாக குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். 08

தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்துங்கள்

PHIமார் சங்கம் கோரிக்கை

நாட்டில் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்தி, உடல்நலம் பாதிக்கப்பட்ட மற்றும் வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கும் தடுப்பூசி செலுத்துமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது. உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக நிலையங்களில் தடுப்பூசி வழங்கப்படுவதில்லை என்றும் அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்களென்பதை சுட்டிக்காட்டியே சங்கத்தின் தலைவர் 08

தடுப்பூசி பெற மறுத்தால் கடும் சட்ட நடவடிக்கை

- பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால்

நாட்டில் தடுப்பூசி பெற மறுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ, மக்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஊரடங்கு உத்தரவை மீறுவோரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் மட்டும் கொவிட்19 தொற்று பரவலை கட்டுப்படுத்த முடியாது.

டெல்டா வைரஸ் மிகவும் அபாயகரமானது. அத்துடன் வேகமாகப் பரவுகின்றது என்பதை மக்கள் புரிந்து கொள்ள 08

கொரோனா பரவல் ஆரம்பித்தது முதல்

எம்.பிமார் 25 பேருக்கு இதுவரை தொற்று உறுதி

03

சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களை பயன்படுத்துங்கள்

இலங்கை அரசுக்கு அமெரிக்கா வலியுறுத்து

03

ஆதிவாசி தலைவர் உருவரிகே உட்பட 44 பேருக்கு கொவிட்

03

மேலும் ஒரு தொகை 'பைஸர்' இலங்கைக்கு

நேற்று கட்டுநாயக்கவை வந்தடைவு

இலங்கைக்கு மேலும் 1,50,000 பைஸர் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. இத் தடுப்பூசி தொகுதி கட்டார் விமான சேவைக்குரிய விமானத்தில் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

815 கிலோ எடை கொண்ட தடுப்பூசிகள் நெதர்லாந்திலிருந்து கட்டார் ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரிஷாத்தின் மனைவி, மாமனாரின் பிணை கோரிக்கை நிராகரிப்பு

06 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனின் மனைவி மற்றும் மனைவியின் தந்தை ஆகியோருக்கான பிணை நிராகரிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் நேற்று (30) ஆஜர்படுத்தியதை அடுத்தே, பிணை நிராகரிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. 08

விக்கல் வீராச்சாமி

அமைச்சர் நாமலுக்கு தக்க பதில் அளித்து விட்டதாக மனோ ஐயா பதிவுகளை பேஸ்புக்ல அடுக்கி வாறார் பார்த்தீங்களோ.....

பாத்தேன், அஞ்சு வருஷம் நல்லாட்சியில நீங்க என்ன செய்தீங்க எண்டு அவர் திருப்பிக் கேட்டா, அவர் அப்படி அநாகரிகமா கேட்கமாட்டார், ஒருவேளை கேட்டா இவர் என்ன பதில் போடுவார்...!!!

இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட நேற்று (30) புதுடில்லியில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

மேலும் ஒரு தொகை 'பைஸர்' இலங்கைக்கு

நேற்று கட்டுநாயக்கவை வந்தடைவு

இலங்கைக்கு மேலும் 1,50,000 பைஸர் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. இத் தடுப்பூசி தொகுதி கட்டார் விமான சேவைக்குரிய விமானத்தில் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

815 கிலோ எடை கொண்ட தடுப்பூசிகள் நெதர்லாந்திலிருந்து கட்டார் ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச செய்திகள்

காபுல் விமானநிலையம் மீது சரமாரி ரொக்கெட் தாக்குதல்

அமெரிக்க துருப்புகள் இன்று வெளியேற்றம்

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தனது துருப்புகளை வாபஸ் பெறுவது மற்றும் ஐ.எஸ் தாக்குதல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இறுதிக் கட்ட வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த காபுல் விமான நிலையத்தின் மீது நேற்று சரமாரி ரொக்கெட் தாக்குதல் இடம் பெற்றது.

அமெரிக்க துருப்புகள் ஆப்கானில் இருந்து முழுமையாக வெளியேறும் காலக்கெடு இன்று செவ்வாய்க் கிழமை முடிவடைகிறது. இதன் மூலம் செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு பின்னர் பதில் நவடிக்கையாக ஆப்கானுக்கு படையெடுத்த அமெரிக்காவின் மிக நீண்ட இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வரவுள்ளது.

எனினும் அமெரிக்கா 2001 ஆம் ஆண்டு ஆட்சி கவிழ்த்த கடும்போக்கு இஸ்லாமியவாதக் குழுவான தலிபான்கள் ஆப்கானில் மீண்டும் ஆட்சியை பிடித்திருக்கும் நிலையில், வெளிநாட்டினர் மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள ஆப்கானியர்களை நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கை அமெரிக்கா தலைமையில் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

காபுல் விமான நிலையத்தில் இருந்து இதுவரை 120,000க்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். கடைசி நாளான இன்று விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான அமெரிக்க துருப்புகள் வெளியேற திட்டமிட்டுள்ளன.

இந்நிலையில் அமெரிக்க படைகள் தற்போது தமது நாட்டு இராஜதந்திரிகளை ஆப்கானில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் அவதானம் செலுத்தியுள்ளன.

அமெரிக்காவின் வெளியேற்ற நடவடிக்கைகளுக்கு தலிபான்களின் போட்டிக் குழுவான ஐ.எஸ் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவதோடு விமானநிலையத்தின் மீது கடந்த வியாழக்கிழமை நடத்திய தற்கொலை தாக்குதலில் 13 அமெரிக்க துருப்புகள் உட்பட 180 க்கும் அதிகமாவர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும் தாக்குதல்கள் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்த நிலையில் காபுலில் ஐ.எஸ் தற்கொலைதாரிகளை

இலக்கு வைத்து கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே நேற்றுக் காலை விமானநிலையத்தை இலக்கு வைத்து ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

விமானநிலையத்தை நேரடியாக இலக்கு வைத்து ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை வெள்ளை மாளிகை உறுதி செய்துள்ளது. எனினும் அது வெளியேற்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தவில்லை என்று அது குறிப்பிட்டுள்ளது.

ரொக்கெட்ட தாக்குதலில் சேதமடைந்த கார் ஒன்றின் புகைப்படத்தை ஏ.எப்.பி செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்த காரின் பின்புறமாக ரொக்கெட் குண்டின் பாகமும் காணப்படுகிறது.

ஐந்து ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டிருப்பதாகவும் அவை அனைத்தும் விமானநிலைய ஏவுகணை பாதுகாப்பு முறையால் அழிக்கப்பட்டிருப்பதாகவும் தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் உயிர்ச்சேதங்கள் அல்லது விமானநிலையத்திற்கு சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

'விமானநிலையம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வந்தது தொடக்கம் எம்மால் சரியாக உறங்க முடியவில்லை' என்று விமானநிலையத்திற்கு அருகில் வசிக்கும் அப்துல்லா என்பவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

'துப்பாக்கி சுடும் சத்தம், ரொக்கெட் வீசும் சத்தம், சைரன் ஒலி அல்லது பெரிய விமானங்களின் சத்தம் பெரும் தொந்தரவாக உள்ளது. அவர்கள் இப்போது நேரடியாக தாக்குதல் நடத்துகிறார்கள், இது உயிர்களை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடகொரியாவின் அணு உலை செயற்பாடு மீண்டும் ஆரம்பம்

வட கொரிய அரசு அந்த நாட்டில் உள்ள யங்பியன் எனும் இடத்திலுள்ள அணு உலையை மீண்டும் இயக்க ஆரம்பித்தது போன்று தெரிவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி முகாமை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் தயாரிக்க பயன்படும் புளூட்டோனியம் அந்த அணு உலையில் தயாரிக்கப்படுவதாக நம்பப்படுகிறது. சர்வதேச அணுசக்தி முகாமையின் உறுப்பினராக இருந்த வட கொரிய அரசு 2009ஆம் ஆண்டு நீக்கப்பட்டது.எனினும் செயற்கைக் கோள் புகைப்படங்கள் மூலம் வட கொரிய அணு உலைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஜூலை மாதம் முதல் இந்த அணு உலையில் இருந்து குளிர்ந்த நீர் வெளியேற்றப்படுவது இது அந்த அணு உலை இயக்கப்படுவதைக் காட்டுவதாகவும் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி முகாமை தெரிவிக்கிறது.

5 மெகாவோட் திறனுடைய உலைகளைக் கொண்டுள்ள யங்பியன் அணுசக்தி வளாகம் வட கொரிய அணு ஆயுத திட்டத்தின் மையமாக உள்ளது.

சிங்கப்பூரில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன் ஆகியோர் 2018ஆம் ஆண்டு டிசம்பரில் சந்தித்த பின் சில மாதங்களிலேயே இந்த அணு உலை பயன்பாட்டுக்கு வந்தது என்று சர்வதேச அணு சக்தி முகாமை தெரிவித்துள்ளது.

அதற்கு பின்னால் இருந்து இந்த அணு உலையை வல்லுநர்கள் கண்காணித்து வருகிறார்கள். இந்த அணு உலை மூலம் எந்த அளவுக்கு ஆயுதம் தயாரிக்க முடியும் என்பதை அறிவதற்காகவே இவ்வாறு கண்காணிக்கப்படுகிறது.

அமெரிக்காவைத் தாக்கிய ஐடா சூறாவளியால் சேதம்

அமெரிக்காவை அச்சுறுத்திய ஐடா சூறாவளி லுசியானாவை தாக்கிய நிலையில் நியு ஓர்லீன்ஸ் நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த சூறாவளி கரையைக் கடந்தபோது மணிக்கு 240 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியது. பலத்த காற்றின் காரணமாக கடல் கொந்தளிப்புக் காணப்பட்டது.

முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததால் மாக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றனர். எனினும் தமது வீட்டின் மீது மரம் விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நியு ஓலீன்ஸில் 2005 கத்ரினா சூறாவளி 1,800 உயிர்களைக் காவு கொண்ட நிலையில் அந்த நகரில் வெள்ளப்பாதுகாப்பு நிலைக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக இந்த சூறாவளி உள்ளது.

இஸ்ரேலில் அனைவருக்கும் மூன்றாவது முறை தடுப்பூசி

இஸ்ரேலில் கொவிட்19 தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் அனைவருக்கும் 3ஆவது முறை கூடுதல் தடுப்பூசிப் போடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டெல்ட்டா வகை வைரஸ் திரிபில் இருந்து பாதுகாத்துக்கொள்ள இஸ்ரேல் இந்த திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட கூடுதல் தடுப்பூசி திட்டத்தில் மூத்தோருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இனி, தடுப்பூசி போட்டுக்கொண்ட அனைவருக்கும் 3வது முறை தடுப்பூசி போடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பைசர்பயோஎன்டெக் இரண்டாவது தடுப்பூசியை போட்டுக்கொண்ட 6 மாதத்திற்குப் பின்னர் அதன் செயல் திறன் குறைவதால் கூடுதல் தடுப்பூசி போடுவது முக்கியம் என்று இஸ்ரேல் கூறியது.

கூடுதல் தடுப்பூசி போடுவதால் நோய்த் தொற்றில் இருந்து 10 மடங்கு கூடுதல் பாதுகாப்பு கிடைக்கும் என்று அது குறிப்பிட்டது.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளும் அனைவருக்கும் மூன்றாவது முறை தடுப்பூசி போடுவது பற்றிப் பரிசீலித்து வருகின்றன.

நியூசிலாந்து: பைசர் தடுப்பூசி போட்டுக்கொண்டவர் மரணம்

நியூசிலாந்தில் பைசர் கொவிட்19 தடுப்பூசியுடன் தொடர்புபட்டதாக நம்பப்படும் முதலாவது உயிரிழப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த தடுப்பூசியால் ஏற்படக்கூடிய மிக அரிதான மாரடைப்பு அல்லது இதயத் தசையின் வீக்கம் குறித்த பெண்ணில் உயிரிழப்புக்கு காரணமாக இருக்கக்கூடும் என்று தடுப்பு மருந்து பாதுகாப்பு குறித்து கண்காணிக்கும் சுயாதீன அமைப்பு ஒன்று குறிப்பிட்டுள்ளது. தடுப்பூசி பெற்ற பின்னரான ஏனைய மருத்துவ பிரச்சினைகளும் இதில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கக் கூடும் என்றும் அந்த அமைப்ப சுட்டிக்காட்டியுள்ளது. இந்த உயிரிழப்புக்கான காரணம் இன்னும் உத்தியோகபூர்வமாக கண்டறியப்படவில்லை. கொவிட்19 தடுப்பூசிகளான பைசர் மற்றும் மொடர்னா மூலம் ஏற்படக்கூடிய மிக அரிதான பக்க விளைவாக மாரடைப்பு உள்ளது என்று ஐரோப்பிய மருத்துவ ஒழுங்குமுறை குறிப்பிட்டுள்ளது. ஆனால் இந்தத் தடுப்பு மருந்தினால் கிடைக்கும் நன்மைகள் அதிகம் என்றும் அது வலியுறுத்தி இருந்தது.

மலைச்சாரலி

ஊவாக்கலை தோட்டத்தில் மண்சரிவு அனர்த்தம்

6 குடும்பங்கள் வெளியேற்றம்

லிந்துலை நிருபர்

லிந்துலை ஊவாக்கலை தோட்டத்தில் வெள்ளிமலை பிரிவிற்குச் செல்லும் வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக அப்பகுதியில் வசித்த 6 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மண்சரிவு அனர்த்தம் இடம்பெற்ற பகுதிக்கு அருகாமையில் உள்ள லயன் குடியிருப்பில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் வசித்து வருவதாக தெரியவருகின்றது. இந்நிலையில் அவர்கள் தொடர்ந்து அச்சத்துடனேயே வசித்துவருகின்றனர். ஊவாக்கலை தோட்டத்தில் வெள்ளிமலை பிரிவிற்குச் செல்லும் வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இதில் 6 குடும்பங்களை சேர்ந்த 21 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தோட்ட நிர்வாகத்தினால் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

1854 ஆம் ஆண்டு குறித்த லயன் குடியிருப்பில் குடியேற்றப்பட்ட பெருந்தோட்ட தொழிலாளர்கள் இன்று வரை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அங்கு வசித்து வருகின்றனர். தமது லயன் வீடுகளின் சுவர்களில் பல வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் இவ்விடயம் தொடர்பில் தோட்ட நிர்வாகம் உட்பட நுவரெலியா பிரதேச காரியாலயத்திற்கு பலதடவைகள் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தனர். குறித்த பிரச்சினை தொடர்பில் 2016ஆம் ஆண்டு மாவட்ட செயலகத்திலிருந்து வருகை தந்த அதிகாரிகள் வெடிப்பு தொடர்பிலும் அவ்விடத்தில் வசிப்பதற்கு ஏதுவான காரணிகள் உள்ளனவா தொடர்பிலும் பரிசோதனைகளை மேற்காண்டுள்ளனர். இருந்த போதிலும் இதுவரை அது தொடர்பான அறிக்கைகள் தமக்குக் கிடைக்கப்பெறவில்லை என குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு தலவாக்கலை எல்ஜின் பிரதான வீதியின் ஊவாக்கலை சந்தியிலிருந்து வெள்ளிமலை தோட்ட பிரியும் வரை காபட் வீதி நிர்மாணிக்கப்படும் போது குடியிருப்பாளர்கள் அருகாமையில் பாதுகாப்பு மதில் அல்லது கட்டிடம் ஒன்றினை நிர்மாணித்து தருமாறு தோட்ட நிர்வாகம், வீதி நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இருந்தபோதிலும் சம்பந்தப்பட்டவர்கள் அதுதொடர்பில் கவனம் செலுத்தவில்லை என குற்றம் சுமத்துகின்றனர். இதன் காரணமாகவே மண்சரிவு ஏற்பட்டு இருக்கக்கூடும் என மக்கள் தெரிவிக்கின்றனர். எதிர்காலத்தில் தாம் அவ்விடத்தில் வாழ்வது தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் தோட்ட வெளிக்கள உத்தியோகத்தரிடம் வினவிய போது மண்சரிவு ஏற்பட்ட பிரதேசத்திற்கு அருகாமையில் இருக்கும் ஆறு குடும்பங்களை பாதுகாப்பான வகையில் குடியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர்களுக்கு தேவையான உலர் உணவு பொதிகளும் தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். அத்தோடு நுவரெலியா மாவட்டத்தின தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் அதிகாரிகளினால் வழங்கப்படும் அறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் எடுக்க தயாராக இருப்பதாகவும் வெளிக்கள உத்தியோகத்தர் திரு.லதீஷ் தெரிவித்தார்.

லொறி விபத்து ஒருவர் படுகாயம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவையிலிருந்து பூண்டுலோயா பகுதியை நோக்கி பயணித்த கனரக வாகனமே இவ்வாறு வீதியிலேயே குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியின் குடாகம பகுதியிலேயே நேற்றுமுன்தினம் இரவு 09.30 மணியளவில் விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது கனரக வாகனத்தின் சாரதியும் நடத்துனர் மாத்திரம் இருந்ததாகவும் நடத்துனர் பலத்த காயங்களுக்குள்ளாகி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹட்டன்

பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு தொடரும் கடும் மழையின் காரணமாக குறித்த வீதி வழுக்கல் நிலையில் காணப்பட்டமையினால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஜெய்லானி தேசிய பாடசாலையில் திருட்டு

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையில் மஹிந்தோதய நெனசல கட்டிடத்திலிருந்த பல்வேறுபட்ட இசைக்கருவிகளை இனம் தெரியாத நபர்களினால் திருடப்பட்டுள்ளன. கட்டிடத்தின் ஜன்னல் கம்பிகளை உடைத்து திருடி சென்றுள்ளதாக பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த 28 ஆம் திகதி இரவு இடம் பெற்றுள்ளதாக பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. பாடசாலையின் கட்டிடங்களை பார்வையிட சென்ற அதிபர் ஜன்னல்கள் உடைக்கப்பட்டுள்ளதை கண்டுள்ளார். இதனையடுத்து ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி பலாங்கொடை பாலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பாடசாலைக்கு வந்த பொலிஸார் கட்டிடத்தின் ஜன்னல்களை பரிசோதித்து திருடப்பட்ட உபகரணங்கள் குறித்து ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மலையகத்தில் கடும் காற்றுடன் மழை; மின்சாரமும் துண்டிப்பு

ஹற்றன் விசேட நிருபர்

மத்திய மலை நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற கால நிலையினை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளுக்கு கடும் மழை பெய்து வருகிறது.

அதிக மழை காரணமாக மேல் கொத்மலை, கெனியோன், லக்ஸபான, நவலக்ஸபான,காசல் ரி, விமலசுரேந்திர, மவுசாகலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களில் நீர்மட்டமும் மிக சடுதியாக அதிகரித்து வருகின்றது. இதனால் நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நீரேந்தும் பிரதேசங்களில் பெய்த அதிக மழை காரணமாக நீர்வீழ்ச்சிகள் மற்றும் ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன. எனவே இப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது. சில பகுதிகளில் கடும் காற்றுடன் மழை பெய்து வருவதனால் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. ஹற்றன் பகுதியிலுள்ள பல பிரதேசங்களுக்கு நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக ஹற்றன் - கொழும்பு மற்றும் ஹற்றன். நுவரெலியா வீதிகளில் பல இடங்களில் மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் பல இடங்களில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறு போக்கு வரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடும்மழைக்கு மத்தியில் சிரமத்துடன் தோட்டத்தொழிலாளர்கள் தொழிலில் ஈடுப்பட்டு வருவதனை காணக்கூடியதாக இருந்தது. சில தோட்டங்களில் மழை மற்றும் கடும் குளிர் காரணமாக தொழிலாளர்களின் வருகை மிக குறைவாக காணப்படுவதாக தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன. இதனால் பெரும்பாலான தோட்டங்களில் தேயிலை உற்பத்தியும் வீழ்ச்சி கண்டுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2021 ஓகஸ்ட் 31 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
30 முதல் 31 வரை
சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் ஆவணி 15
ராகுகாலம் : மாலை : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: நவமி

இராசி பலன்கள்
மேஷம் - பாராட்டு
ரிஷபம் - முயற்சி
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - சுகம்
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட நேற்று (30) புதுடில்லியில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். மிலிந்த மொரகொட தூதரக அதிகாரிகளால் வரவேற்கப்படுவதையும் மத வழிபாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

நாளை முதல் சிவப்பு சீனி கிலோ ரூ.130க்கு விற்பனை

வெள்ளை சீனியின் விலையை குறைக்க நடவடிக்கை

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன

லோரன்ஸ் செல்வநாயகம்

ச.தொ.ச. மற்றும் கூட்டுறவு கடைகள் மூலம் சிவப்பு சீனியை நாளை முதல் 130 ரூபாவுக்கு விற்பனை செய்யவுள்ள தோடு வெள்ளை சீனியின் விலைகளையும் குறைப் பதற்கு நடவடிக்கை எடுக் கப்படும் என கூட்டுறவு விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாது காப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

நாளை முதல் 130 ரூபாவுக்கு ச.தொ.ச. மற்றும் கூட்டுறவு கடைகள் மூலம் சிவப்பு சீனியை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித் துள்ள அவர், தற்போது சந்தையில் வெள்ளைச் சீனி 220 ரூபாவாக விற்பனை செய் யப்படுவதாகவும் அதன் விலையையும் குறைப்ப தற்கு நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனியை பதுக்கி வைத் துள்ளவர்கள் தொடர் பில் தொடர்ந்தும் சுற் றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள இராஜாங்க அமைச் சர், அது தொடர்பில் தகவல் வழங்கு வதற்காக 1977 நேரடி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு நுகர்வோர் அதிகார சபையிடம் தெரி விக்க முடியும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

08

நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ள:

தத்தமது நிர்வாகப் பிரதேசத்திலேயே தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்

இராணுவத் தளபதி மக்களுக்கு அறிவுறுத்தல்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் தடுப்பூசி யைப் பெற்றுக் கொள்பவர்கள் தமது கிராம சேவை அதிகாரி பிரிவு அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக நிர்வாக பிரதேசத்தில் மட்டும் தமக்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்தந்த பிரதேசங்களுக்கு தேவையான தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் தமக்கான தடுப்பூசியை அந்தந்த பிர தேசத்திலேயே பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தடுப்பூசி வழங்கும் சில நிலையங்களில் கடந்த சில தினங்களாக இடம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமையை கவனத்திற் கொண்டே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித் துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் 30வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொழும்பு விஹாரமாதேவி பூங்கா மற்றும் தியத்த உயனவிலும் அமைக் கப்பட்டுள்ள தடுப்பூசி நிலையங்களில் தமக்கான தடுப்பூசிகளைப் பெற் றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

நாட்டில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் மாத் திரம் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 241 நபர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க நாட்டில் நேற்று வரை ஒரு கோடி இருபத்தி மூன்று இலட்சத்து

08

மருந்து களஞ்சியசாலையில் 1,34,500 போதை மாத்திரைகள்

கண்டி பகுதியில் சம்பவம்; பொலிஸார் விசாரணை

கண்டி பொலிஸ் பிரிவில் அம்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸாருக்கு கிடைத்த தகவ லுக்கமைய மருந்து களஞ்சியசா லையொன்று சோதனைக்குட்ப டுத்தப்பட்டது.

இதன்போது களஞ்சியசாலை யிலிருந்து 1,34,500 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 39 வயதுடைய உடகம, அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவரென தெரிவித்த கண்டி பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

அனைத்து சுகாதாரத் துறை ஊழியர்களுக்கும்:

அரசு 3வது தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுப்பது அவசியம்

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

அனைத்து சுகாதாரத்துறை ஊழி யர்களுக்கும் மூன்றாவது தடுப் பூசியை பெற்றுக்கொடுக்க நட வடிக்கை எடுக்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அர சாங்கத்திடம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

அது தொடர்பில் அரசாங்க மருத் துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவிற்கு கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமந்த ஆனந்த அது தொடர் பில் மேலும் தெரிவிக்கை யில்:

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆறு முக்கிய விடயங்களை முன்வைத்து சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவிடம் வேண் டுகோள் விடுத்துள்ளது. அதற்கிணங்க நாட்டை மீண்டும் திறப்பதானால் கண்டிப் பாக அனைத்து சுகாதார பிரிவுகளும் பலப்படுத்தப்பட வேண்டும்.

சுகாதாரத் துறை ஊழியர்கள் 300க்கும் மேற்பட்டோர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் சிலர் மரணமடைந்தும் உள்ளனர்.

எந்தளவு ஆஸ்பத்தி ரிகளில் இருந்தாலும் நோயாளிகளை பரா மரிப்பதற்கு ஊழியர் களின் பற்றாக்குறை நிலவுகிறது.

சுகாதாரத்துறை ஊழியர்களின் பிள் ளைகளும் மிகுந்த எச்சரிக்கை நிலையில் உள்ளனர். அதனைக் கவனத்திற் கொண்டு சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியைப்பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.(ஸ)

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு நாம் ஆதரவு

ஐ.நா வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் அறிக்கை

இலங்கை மற்றும் உலகளவில் காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் குடும்பங்கள் மற்றும் அவர்களது உறவுகளுக்கு ஆதர வாக இருப்போமென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர் வதேச தினத்தை முன்னிட்டு வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் இதனை தெரிவித்துள்ளார்.

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் முயற்சியில் அவர்கள் நம்பிக்கை மற்றும் விரக்திக்கு மத் தியில் காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

சில நேரங்களில் பல ஆண்டுக ளாக, தங்கள் அன்புக்குரியவர்கள் இருக்குமிடம் பற்றிய செய்திகளுக் காக உறவினர்களும் குடும்பமும் காத்திருப்பதாகவும் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டினார்.

இ த ே வ ள ை உண்மையை கண்ட றிவதற்கான தேடல் அவர்களை ஆபத்துக் குள்ளாக்குமென குறிப் பிட்ட அவர், பாதிக் க ப் ப ட் ட வ ர் க ளின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களும் பாது காப்பற்ற சூழலில் வாழ்வதாகவும் கூறினார்.

குறிப்பாக இப் போராட்டத்தில் பெரும்பாலும் பெண்களே ஈடுப டுகின்றனர். அவர்கள் மிரட்டல், துன்புறுத்தல் மற்றும் பழிவாங்கல் களை சந்திக்க நேரிடுமென்றும் ஐ.நா. வதிவிட பிரதிநிதி குறிப்பிட் டுள்ளார்.

பாதுகாப்பின்மை உணர்வு காணாமல் போனவர்களின் நெருங் கிய உறவினர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் சமூகங்கள் மற்றும் அனைத்து சமுதாயத்தையும் பாதிக்கி றது என்றும் ஹனா சிங்கர் தெரிவித் துள்ளார்.

கொரோனா பரவல் ஆரம்பித்தது முதல்

எம்.பிமார் 25 பேருக்கு இதுவரை தொற்று உறுதி

இலங்கையில் கொவிட்19 வைரஸ் பரவ ஆரம்பித்த நாளி லிருந்து தற்போது வரை 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி யுள்ளதாக பாராளுமன்ற படைக் கல சேவிதர் நரேந்திர பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும் நேற்று (30) குரு ணாகல் மாவட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாரா ளுமன்ற உறுப்பினர் அசங்க நவ ரத்னவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை பாராளு மன்ற

08

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஹுஸைன் பாரூக்கின் மறைவுக்கு

முஸ்லிம் மீடியா போரம் அனுதாபம்

பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சித் துறைகளில் ஐந்தரை தசாப் தங்களுக்கு மேலாகப் பணி புரிந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். பி. ஹுஸைன் பாரூக்கின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த கவலையை யும் அனுதாபத்தையும் தெரிவிப்ப தாக அதன் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

மர்ஹூம் ஹுஸைன் பாரூக், கொழும்பு புதுக்கடையில் பிறந்த வர். தினபதி பத்திரிகையினூடாக ஊடகத் துறையில் பிரவேசித்த இவர், 1956ஆம் ஆண்டு இலங்கை ஒலிப ரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பாடல் ஒன்றைப் பாடியதை யடுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபனத்தில் உள்வாங்கப்பட்டார். பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபன முஸ்லிம் சேவையில் தயா ரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

வானொலியில் மிகப் பிரபலமான கலை நிகழ்ச்சிகளை அறிமுகப்ப டுத்தி, நேயர்கள் மத்தியில் தனக் கென்று ஒரு முத்திரை பதித்த ஒரு கலைஞர் ஆவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத் தின் ஆலோசகர் மற்றும் செயற்குழு உறுப்பினர் போன்ற முக்கிய பத விகளை வகித்த இவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் அலையன்ஸில் செயலாள ராகவும் இருந்துள்ளார்.

வல்ல இறைவன் அவரது பாவங் களை மன்னித்து அவரது அத்தனை நற்கருமங்களையும் ஏற்று அங்கீக ரித்து உயர்ந்த சுவனபதியை வழங்க வேண்டுமெனவும் அவரது பிரிவி னால் துயருற்றிருக்கும் அவரது குடும் பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு மன ஆறுதலைக் கொடுக்க வேண் டுமெனவும் இறைவனிடம் பிரார்த் திக்கிறோம், என தெரிவிக்கப்பட் டுள்ளது.

கொவிட் தொற்றாளரை கொண்டு சென்ற அம்பியூலன்ஸ் விபத்து

கொவிட்19 தொற்று உறுதியான பெண் ஒருவரை வைத்தியசாலைக்கு அழைத்து சென்ற 'சுவசெரிய' நோயாளர் அம்பியூலன்ஸ் வண்டி யொன்று கேகாலை அவிசாவளை வீதியின் தெஹியோவிட்ட பகுதி யில் நேற்று (30) பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

கொவிட் 19 தொற்றுக்குள்ளான பெண்ணை தெரணியகலையிலி ருந்து அவிசாவளை மாவட்ட வைத் தியசாலைக்கு அழைத்து சென்ற போதே, நேற்று அதிகாலை இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எதிர்திசையில் பயணித்த பார ஊர்தியொன்று அம்பியூலன்ஸுக்கு இடமளிக்காமை காரணமாக இந்த நோயாளர் காவு வண்டிக் பள்ளத்தில் வீழ்ந்து இந்த விபத்து இடம்பெற் றுள்ளதாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை யென பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களை பயன்படுத்துங்கள்

இலங்கை அரசுக்கு அமெரிக்கா வலியுறுத்து

இலங்கையின் பொரு ளாதாரத்தை மேம்படுத் தக் கொள்ள சர்வதேச நாணய நிதியத்தை கரு வியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசாங்கத் திடம் அமெரிக்கா வலியு றுத்தியுள்ளது.

உறுதியான பொரு ளாதார அடித்தளத்தை உருவாக்கும் மாற்றங்க ளில் அரசாங்கம் ஈடுபட வேண்டு மென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அண்மையில் நிதிய மைச்சருடன் நடைபெற்ற சந்திப்பில் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஆபத்து தொடர்பாகவும் விவாதித் ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன் இலங்கை யின் பொருளாதாரம் பற்றிய கவலை தொடர்பா கவும் குறிப்பாக நாட்டின் பொருளாதாரம் தற்போது சிறந்த ஆரோக்கிய நிலையில் இல்லையென் பதை சுட்டிக்காட்டியதாக வும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய வளங்களைப் பயன்படுத்துவதே இதற்கான தீர்வென தாம் நம்புவதாகவும் அமெ ரிக்க தூதுவர் அலெய்னா டெப் லிட்ஸ் தெரிவித்துள்ளார்

ஆதிவாசி தலைவர் ஊருவரிகே உட்பட 44 பேருக்கு கொவிட்

தம்பான ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ, அவரது மனைவி உட்பட 44 ஆதிவாசிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆதிவாசிகள் 114 பேரிடம் நடத்தப்பட்ட எழுமாறான பீ.சீ. ஆர். பரிசோதனையின் போது இந்த 44 பேருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய் யப்பட்டுள்ளது.

ஆதிவாசிகளின்

08

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	145.02	149.94
கனடியன் டொலர்	158.24	162.86
யூரோ	231.77	238.57
ஜப்பான் யென்	1.7943	1.8404
சிங்கப்பூர் டொலர்	145.86	149.92
ஸ்டேலிங் பவுன்ஸ்	273.66	280.61
சுவிஸ் பிராங்க்	213.64	220.71
அமெரிக்க டொலர்	198.59	202.89

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	530.28	கட்டார் ரியால்	54.90
குவைத் டினார்	664.39	சவூதி ரியால்	53.30
ஓமான் ரியால்	519.27	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.42

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் ஆவணி மாதம் 15ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 முஹர்ரம் பிறை 21

குறள் தரும் சிந்தனை



அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து

எல்லா உயிர்களுக்கும், எந்தக் காலத்திலும் அழியாமல் வரும் பிறப்பை உண்டாக்கும் விதைதான் ஆசை என்று பெரியோர் கூறுவர்.

அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தும் முயற்சி

நாட்டில் கொவிட் 19 தொற்று பதிவாகத் தொடங்கியது முதல் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களதும் உயிரிழப்பவர்களதும் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்ற தற்போதைய சூழலில், இந்நடவடிக்கைகள் மேலும் விரிவான அடிப்படையில் பரவலாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவற்றில் தனிமைப்படுத்தல் ஊடரங்கும் அடங்கும். மறுபுறம் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் விரிவான அடிப்படையில் இடம்பெறுகின்றது. இத்தொற்றின் பரவுதலையும் தாக்கத்தையும் கட்டுப்படுத்துவதற்காக இரண்டு வகையான நடவடிக்கைகளும் ஏக காலத்தில் சமமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழலில் சிலர் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதன் பொருட்டு சூட்சுமமான நடவடிக்கைகளையும் அவர்கள் கையாளுகின்றனர். அதாவது நாட்டில் சில அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக சில பால்மாக்கள் சந்தையில் இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் சில வர்த்தக நிலையங்களுக்கு 'ஒடர்' வழங்கினால் தேவையான பால்மாவை பாவனையாளரால் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இது உண்மையான பால்மா தட்டுப்பாடா? என மக்கள் வினவுகின்றனர்.

இதே போன்று சீனிக்கும் கடந்த சில தினங்களாக தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் நாளை முதலாம் திகதி முதல் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் (சதொச) ஊடாக சிவப்பு சீனியை கிலோ 130.00 ரூபாவுக்கு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இதேசமயம் சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதன் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக திடீர் தேடுதல்களையும் சோதனைகளையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆரம்பித்துள்ளனர். இவர்கள் கடந்த இரண்டு தினங்களில் மேற்கொண்ட திடீர் சோதனைகளில் பல்லாயிரம் மெற்றிக் தொன் சீனி சில களஞ்சியசாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக வத்தளை, மாபோலையிலுள்ள களஞ்சியசாலையொன்றில் 4800 தொன்களும், சீதுவ, பண்டாரகம, கம்பஹா ஆகிய பிரதேசங்களிலுள்ள களஞ்சியசாலைகளில் 5400 மெற்றிக் தொன்களும் என்றபடி சீனி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை கடந்த இரண்டு நாட்களில் சில பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது கண்டறியப்பட்டிருக்கும் சீனியின் அளவாகும். அவ்வாறெனில் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இருக்கும் களஞ்சியசாலைகளிலும் சோதனைகளை நடத்தினால் உண்மை நிலைமை வெளிப்படும் என்பது மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

சீனி உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்களை சந்தைக்கு விடுவிக்காது மறைத்து வைத்துக் கொண்டு அவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகக் காட்டும் முயற்சியே தற்போது இடம்பெறுகிறது. இதன் ஊடாக சீனி உள்ளிட்ட பொருட்களின் விலையை அதிகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விதமான செயற்பாடுகளில் வர்த்தகர்கள் குறிப்பாக உற்பத்தியாளர்களும் மொத்த விற்பனையாளர்களும் ஈடுபடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரமாகப் பரவும் கொவிட் 19 தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றும் முயற்சி முன்னெடுக்கப்படும் தற்போதைய சூழலில், இத்தகைய செயற்பாடுகள் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும். அவை மனிதாபிமானமற்ற செயற்பாடுகளாகும். தொற்றுநோயிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் பொறுப்பு தனியே அரசாங்கத்திற்குரியதல்ல. மாறாக வர்த்தகர்கள் உள்ளிட்ட எல்லா தரப்பினரும் ஒன்றுபட்டு இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காகச் செயற்பட வேண்டும். வர்த்தகர்கள் சமூகப் பொறுப்பை மறந்து செயற்படலாகாது.

இந்தச் சூழலில் அத்தியாவசியப் பொருட்களுக்கு சந்தையில் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கொள்கை இலாபம் பெறும் வகையில் பொருட்களுக்கு விலையை அதிகரிக்க முயற்சிப்பதானது, மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாகவே அமையும். குறிப்பாக இது அப்பாவி மக்களை நசுக்கும் செயற்பாடாகும். .

களஞ்சியசாலைகளில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சீனியானது கடந்த வருடம் ஒரு கிலோவுக்கு ரூ 85.00 என உச்சபட்ச விலை நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டதாகும். அதேநேரம் சீனிக்கு 25 வீதம் வரிவிலக்கு அளிக்கப்பட்ட சமயம் பல்லாயிரம் மெற்றிக் தொன் சீனி நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டும் உள்ளது.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். இப்பொறுப்பிலிருந்து வர்த்தகர்கள் குறிப்பாக உற்பத்தியாளர்களும் மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்களும் விதிவிலக்கானவர்கள் அல்லர். இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு வருகை தந்த சுற்றுலா போக்குவரத்துக் கப்பல்

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தின் எண்ணெய் விநியோகத்தில் புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்து 'புரூடன்சியல் சிப்பிங் ' (prudential shipping) திட்டத்தில் உள்ள கப்பலான 'நவிகேடர் ஒப் த சிப் ' எனும் சுற்றுலா போக்குவரத்துக் கப்பல் எரிபொருள் நிரப்பிக் கொள்வதற்காக ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை அண்மையில் வந்தடைந்திருந்தது.

பஹாமிய கொடியுடன் பயணித்துக் கொண்டிருந்த இந்த சுற்றுலா பயணிகள் கப்பல் எகிப்து நாட்டின் ஸைட் துறைமுகத்திலிருந்து ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு வருகை தந்தது. அதன் பின்னர் அக்கப்பல் தென்கொரிய நாட்டின் யோஸு துறைமுகத்தை சென்றடையவுள்ளது. 217 ஊழியர்கள் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப இக்கப்பலில் வருகை தந்திருந்தனர்.

எரிபொருள் விநியோக பிரதான இடமாக துறைமுகத்தை கட்டியெழுப்பும் திட்டம்

கப்பல்களுக்கு எண்ணெய் விநியோகித்தல் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தின் சேவைகளில் மிகவும் முக்கியமானதாகும்.

இதனால் துறைமுகத்திற்கு பல்வேறு நாடுகளின் கப்பல்கள் எண்ணெய் பெறுவதற்காக வருகை தந்த வண்ணமுள்ளன. கொரோனா தொற்றின் காரணமாக ஏற்பட்ட முடக்கநிலைக்கு பின்பு ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு வருகை தந்த முதலாவது பயணிகள் கப்பலாகவும் இந்தக் கப்பல் திகழ்கின்றது.

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி திஸ்ஸ விக்கிரமசிங்க இதுபற்றித் தெரிவிக்கையில், ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் தற்பொழுது எரிபொருளை மொத்தமாக விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

சந்தையில் நிலவி வரும் போட்டிக்கு ஏற்ப எண்ணெய் விநியோகிக்கும் நிலையமாக ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 'சைனொபெக் லங்கா' நிறுவனத்துடன் கூட்டிணைந்து மொத்த எண்ணெய் இறக்குமதியாளராக எண்ணெய் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

எம். இர்பான்ஸகரியா
ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

கொடிய வியாதிகளுக்குக் காரணமான இரசாயனப் பசளை இனியும் வேண்டாம்!

அடுத்து வரும் பெரும்போகத்தின் போது அநுராதபுரம் மாவட்டத்தில் 1,85,000. ஹெக்டயர் காணிகளில் நெல் மற்றும் மேலதிக பயிர்கள் உற்பத்தியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் நடவடிக்கையில் இம்மாவட்ட விவசாயிகள் தற்போதிருந்தே தங்களை முழுமையாக ஈடுபடுத்தி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்துக்கு மாத்திரம் 05 மெட்ரிக் தொன் சேதனப் பசளை தேவைப்படும் நிலையில், இது வரையில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான பசளை உற்பத்தியாளர்கள் இந்த சேதனப் பசளை உற்பத்திக்காக தங்களைப் பதிவு செய்துள்ளனர். இதன் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் இதுவரையில் 2400 சேதனப் பசளை உற்பத்தித் திட்டங்கள் நடைமுறையில் உள்ளதாக பசளை செயலக பிரிவின் அநுராதபுரம் மாவட்ட முகாமையாளர் பந்துல குமார தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் இம்மாவட்டத்தின் 400 இடங்களில் பாரிய அளவிலான உற்பத்தித் திட்டங்களும், 2000 இடங்களில் சிறிய அளவிலான உற்பத்தித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், அநுராதபுரம் மாவட்டத்திற்குத் தேவையான அனைத்து பசளை வகைகளையும் உற்பத்தி செய்வதே இதன் இலக்காகும் எனவும் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் எப்பாவல பொஸ்பேட் நிதியத்தை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவும் விவசாய அமைச்சு முன்வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக வடமத்திய மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை வளவுகளிலும் சேதனப் பசளை உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் உள்ள மருந்து மூலிகைத் தோட்டங்கள் மற்றும் வைத்தியசாலை வளவில் உள்ள மரம், செடி, கொடிகள், பூஞ்செடிகள் போன்றவற்றுக்கும் தேவையான சேதனப் பசளையை அங்கிருந்தே உற்பத்தி செய்து பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேதனப் பசளை உற்பத்தியில் அநுராதபுரம் மாவட்ட விவசாயிகள் மும்முரம்

இந்த உற்பத்தித் திட்டத்தை மேற்கொள்ள ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்கள் முன்வந்துள்ளனர். ஊழியர்களின் முயற்சியால் கஹட்டகஸ்திகிலிய ஆயுர்வேத மத்திய நிலையத்தை கேந்திரமாகக் கொண்டு பசளை உற்பத்தி திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பதவிய பராக்கிரமபுர விவசாய சேவைப் பிரிவில் உள்ள 15 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சேதனப் பசளை உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திலும் பல விவசாயிகள் தம்மை ஈடுபடுத்தி சேதனப் பசளை உற்பத்தித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இங்குள்ள விசுவகொட்டுவ, சுதர்சனகம, லீயாய, புத்தங்கல, பராக்கிரமபுர, அலிகிம்புலாகல, மைத்திரிபுர, அபயபுர, கும்புக்வெவ, பூநேவ, மகசின்புர, ருவன்புர, போகஹவெவ ,பாலியாவெவ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள விவசாயிகளே இந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இவை தவிர இப்பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 200 விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்குத் தேவையான சேதனப் பசளையை தாமே தயாரிக்கும் நடவடிக்கையிலும் தற்சமயம் ஈடுபட்டுள்ளனர். இதன் கீழ் இங்கு சிறியளவிலான சேதனப் பசளை உற்பத்தியில் 23 விவசாயிகளும், பாரிய அளவிலான சேதனப் பசளை உற்பத்தியில் 03 விவசாயிகளும் ஈடுபட்டுள்ளனர். எதிர்வரும் பெரும் போகத்திற்காக இப்பிரதேசங்களிலிருந்து 01 இலட்சம் கிலோ சேதனப் பசளையை உற்பத்தி செய்து நாட்டுக்கு வழங்குவதே இவர்களின் நோக்கமாகும்.

அநுராதபுரம் மாவட்டத்தின் பல விவசாயப் பிரிவுகளில் வசிக்கும் விவசாயிகளில் பலர் தனிப்பட்ட முறையிலும் சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். சூழலில் காணப்படும் பல்வகை மூலப்பொருட்களை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர். இப்பிரதேசங்களின் சிறிய குளங்களை மூடியிருந்த நீர்த் தாவரங்களான ஜப்பான் ஜபர, சல்வீனியா, பாசி போன்ற மிதக்கும் தாவரங்களை இவர்கள் அதிகளவில் எடுத்து இந்த உற்பத்தியை மேற்கொண்டுள்ளதால், விவசாய நீர்ப்பாசனத்துக்கு தடையாகவிருந்த இத்தாவரங்களும் அகற்றப்பட்டு, விவசாய நீர்ப்பாசனத்தை இலகுவாக மேற்கொள்ள வாய்ப்பும் கிடைத்துள்ளது. குளங்களும் துப்புரவாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றை அகற்றும் பணிகளில் பெண்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.சேதனப் பசளை உற்பத்தியில் வீடுகளில் உள்ள பெண்கள் ஈடுபட்டு வருகின்றமையும் விசேட அம்சமாக குறிப்பிடத்தக்கதாகும். உடலுக்கு கொடிய வியாதிகளை ஏற்படுத்தும் இரசாயனப் பசளையை முற்றாக ஒழிக்கும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு நாட்டுக்குத் தேவையான சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் இலக்குடன் பல விவசாயிகள் இத் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக கைகோர்த்துள்ளனர்.

ஏ.ஆர்.எம்.ரபியூதீன்...
(திறப்பனை தினகரன் நிருபர்)

உலகின் வரலாற்றில் மனித இனம் சந்தித்த கொடிய வைரஸ் ஆபத்துகள்!

கொவிட் 19 தொற்று நோய் உலகளாவிய ரீதியில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதுடன் மனித உயிர்களை பலியெடுத்தும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இலங்கையில் தற்போது டெல்டா பிறழ்வுடன் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது.

புவியில் உயிரினங்களின் மிகையான இனப்பெருக்கம் ஏற்படும் காலத்தில் இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்காக காலத்திற்கு காலம் இவ்வாறுதான் பல்வேறு கொள்ளை நோய்கள் தோன்றி பேரழிவை ஏற்படுத்தி வந்துள்ளதை உலக வரலாற்று ரீதியாக பார்க்க முடியும். புவியின் உயிரின பரிணாணக் கோட்பாடும் இயற்கைச் சமநிலை என்ற இந்த நம்பிக்கையையே கொண்டுள்ளது.

'ஜஸ்டினியன் கொள்ளை நோய்' என்ற நோய்த் தொற்று கடந்த 6 ஆம் நூற்றாண்டில் உருவெடுத்து ஏராளமான உயிர்களைப் பலியெடுத்து ஓய்ந்ததாக வரலாறு கூறுகின்றது.



இன்றைய அச்சுறுத்தலையும் அவதானமாக செயற்பட்டு முறியடித்தே ஆக வேண்டும்!

கறுப்பு மரணம் என்பது 14 ஆம் நூற்றாண்டில் பலரைப் பலிகொண்ட தொற்றாகும்.

'ஸ்பானிஷ் ஃபுளு' என்பது 19181920 காலப் பகுதியில் உலகின் பெருமளவு நாடுகளில் பல இலட்சம் பேரைப் பலியெடுத்தது.

இவற்றைத் தொடர்ந்து கடந்த 2019 ஆம் ஆண்டில் உருவெடுத்தது கொவிட் 19 தொற்று.

உலக வரலாற்றில் கொள்ளை நோய்கள் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களே பெரும்பாலும் மரணத்தைத் தழுவினார்கள். அதாவது உடலில் இயற்கை நோய் எதிர்ப்பாற்றல் உள்ள வர்கள் தப்பிக் கொண்டனர். உடலில் எதிர்ப்பு சக்தி உள்ள வர்களை மட்டுமே இயற்கையானது தேர்வு செய்து புதிய சந்ததிகளை தோற்றுவிக்கும் என்றும் கூர்ப்பியலாளர்கள் சிலர் கருதுகின்றனர். இந்நிகழ்வானது புவியில் மனிதனின் குடித்தொகையை சமநிலையில் பேண நடைபெறுகின்ற ஒழுங்காக இருக்கலாமென்ற கருதுகோளொன்று உள்ளது. அது உயிரியல் விஞ்ஞானத்தின் ஒரு நம்பிக்கையாகும்.

இந்த நோயின் தாக்கம் சனநெருக்கடி உள்ள பிரதேசத்தில் அதிகளவு மரணத்தை ஏற்படுத்தக் காரணங்கள் உள்ளன. மாசடைந்த வளி, நச்சுத் தன்மையான உணவு, துரித உணவுகள், உடற்பயிற்சியின்மை போன்றவை காரணமாக நீரிழிவு, ஆஸ்த்துமா, இதயநோய்கள், சிறுநீரக நோய், புற்றுநோய், மனஅழுத்தம் போன்றவை உண்டாகி நோய் எதிர்ப்பாற்றல் குறைவடைந்து போகின்றது. முதுமை காரணமாகவும் நோய் எதிர்ப்பாற்றல் குறைகின்றது.

அதேவேளை ,கிராமங்களில் இந்த நோயின் தாக்கம் மிகவும் குறைந்த மரணத்தை ஏற்படுத்தக் காரணங்கள் உள்ளன.

நச்சுத்தன்மை இல்லாத ஆரோக்கியமாக உணவு, துரித உணவுப் பழக்கம் குறைவு ,சுத்தமான வளி, போதியளவு உடற்பயிற்சி, மகிழ்ச்சியான வாழ்க்கை போன்றன இதற்குக் காரணங்களாகும்.

இந்த நோயின் தாக்கத்தில் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளும் வழிவகைகள் தொடர்பாக தொடர்ந்தும் அலட்சியமாக இருக்கலாகாது. தற்போதைய நிலையில் நாம் எப்போதும் ஒரு தொற்றாளருக்கு அருகில் இருக்கிறோம் என ஒவ்வொருவரும் எண்ணிக் கொள்ள வேண்டும். நம் பாதுகாப்பை வேறு ஒருவரின் கைகளில் ஒப்படைக்கவும் கூடாது.

நாம் கட்டாயமாக இந்த அலை ஓயும் வரை சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

டிஜிட்டல் தேசமாக இலங்கையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்

டிஜிட்டல் தொழில்நுட்ப விழிப்புணர்வையும், அதன் உபயோகத்தன்மையையும் மேம்படுத்தவென தேசிய மட்டத்திலான முயற்சிகள் ஆரம்பம்

இலங்கையில் டிஜிட்டல் தொழில்நுட்ப மாற்றத்தின் முன்னோடியாகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ஐ.சி. ரி.ஏ) செயற்படுகின்றது. இது இலங்கையை டிஜிட்டல் மய நாடாக மாற்றும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

அந்த வகையில் ஐ.சி.ரி.ஏ அதன் தொலைத்தொடர்பு பங்காளர்களதும், தொழில்துறை பங்காளர்களதும் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சு, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (ரி.ஆர்.சி.எஸ்.எல்) ஆகியவற்றுடனும் இணைந்து, தேசிய ரீதியிலான டிஜிட்டல் மாற்ற நிகழ்ச்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கொன்றை இணைய வழி ஊடாக அண்மையில் நடத்தியது.

பிராந்திய பங்காளர்கள் இதில் பங்குபற்றினர். டிஜிட்டல் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின் நிமித்தம் ஐ.சி.ரி.ஏ இனால் ஐந்து பிராந்தியத் திடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் பிராந்திய மட்டத்திற்கான இரண்டாவது கருத்தரங்கு இதுவாகும்.

இத்திட்டத்தின் கீழ் பிராந்திய அபிவிருத்திக்கான டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான முதலாவது கருத்தரங்கு வடக்கு பிராந்தியத்தை மையமாகக் கொண்டு கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது. தற்போது தென்பிராந்தியத்திற்கான கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளதோடு, அடுத்து வரும் சில மாதங்களில் மேற்கு, கிழக்கு, மத்திய ஆகிய பிராந்தியங்களுக்கான கருத்தரங்குகளும் நடத்தப்பட உள்ளன.

அந்த வகையில் தென்பிராந்திய அபிவிருத்திக்கான டிஜிட்டல் தொழில்நுட்ப மேம்பாட்டுக் கருத்தரங்கில் இப்பிராந்தியத்திலுள்ள காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 500 இற்கும் மேற்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இந்த முயற்சியின் ஊடாக தென்பிராந்தியத்திலுள்ள அரச நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், விவசாயம் மற்றும் கல்வித் துறையில் பணிபுரியும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அவர்களுடன் இணைந்துள்ள உள்ளூர் நிபுணர்களின் ஊடாக புதிய மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சியையும் முன்னேற்றத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த இணைய வழி கருத்தரங்கில் முதல் நாளில் 350 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர். இரண்டாம் நாளன்று 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் ஊடாக அதிகளவானோர் பயன் பெறக் கூடிய வகையில் சிங்களம், தமிழ் மற்றும் சைகை மொழிகளில் விளக்கங்களும் அளிக்கப்பட்டன. காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மாவட்ட அலுவலகங்களிலிருந்து உரையாடலில் இணைந்தனர். இது போன்ற ஒரு தேசிய நிகழ்வு மூன்று முக்கிய மொழிகளிலும் சைகை மொழியிலும் நடத்தப்பட்டமையின் பயனாக அனைத்து பார்வையாளர்களையும் சென்றடைந்ததோடு எல்லோரது பாராட்டையும் பெற்றுள்ளது.

இக்கருத்தரங்கில் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா உரையாற்றுகையில், 'பொது மக்களுக்கான சேவைகளை இலகுபடுத்துவதற்கும் அதனை திறம்பட முன்னெடுப்பதற்குமான செயற்றிறன்களை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை தொழில்நுட்பத்தில் அபிவிருத்தி அடைந்த நிலையை அடையவென வளங்களை ஒன்றிணைப்பதே சிறந்த ஏற்பாடாக அமையும். எங்களிடமுள்ள வலிமை மற்றும் வளங்களை பயன்படுத்தி, தொழில்நுட்பத்தை சரியான இடத்திற்கு கொண்டு வருவதில் நாம் உறுதியாக உள்ளோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தரங்கில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தின் (ஐ.சி.ரி.ஏ) தலைவரும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (டி.ஆர்.சி) பணிப்பாளர் நாயகமுமான ஓஷத சேனநாயக்க உரையாற்றுகையில், "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ஐ.சி.ரி.ஏ) நாட்டின் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் ஊக்கியாகவும் சிறந்த செயல்பாட்டாளராகவும் மாற்றமடையும். டிஜிட்டல் அரசு, டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் சேவைகளின் முன்னோக்கு ஆகிய மூன்று அடிப்படைகளுடன் டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட இலங்கையை உருவாக்குவதற்கான தொலைநோக்குடன் எமது நிறுவனம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது" என்றார்.

"ஐ.சி.ரி.ஏ. வின் டிஜிட்டல் பொருளாதார பிரதம உத்தியோகத்தர் அனுர டி அல்விஸ் உரையாற்றும் போது, '2024 க்குள் 3 பில்லியன் ரூபா பெறுமதியான ஏற்றுமதியை அடைவதே எமது இலக்கு. அதனை யதார்த்தமாக்க நாட்டில் 03 இலட்சம் ஊழியர்கள் தேவை. ஆனால் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 175,000 ஆகும். கடந்த சில தசாப்தங்களாக சேவை துறையில் கவனம் அதிகம் செலுத்தப்பட்டது. என்றாலும் உலகளாவிய வெற்றியை அடைவதற்கு ஆக்க நிர்மாணங்கள் முக்கியமானவை. அதிக ஐ.பி, வருவாய் மற்றும் எஃப்.டி.ஐ ஆகியவற்றைப் பாதுகாக்க இது சார்ந்த தயாரிப்புகளே சிறந்த வழியாகும்.

சப்ரகமுவ மேம்பாட்டு திட்டங்களின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பணமும், தொடக்க மையத்தின் நிறுவனர் உதித்த சம்பத் பண்டாரவின் முன்னிலையில் தொடக்க நிறுவனங்கள் மற்றும் தனி வியாபாரிகளை ஆதரிக்கும் நோக்கத்துடன் நடந்தது.

அவர் பேசுகையில், 'உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தொழில்நுட்பம் சார்ந்த போட்டிகளை நடத்துதல் அடங்கலாக சப்ரகமுவ ஸ்டார்ட் அப்ஹப் உடன் ஐந்தாண்டு திட்டம் உள்ளது' என்றார்.

சூழல் அமைப்பு மேம்பாட்டு பணிப்பாளர் சசீந்திர சமரரத்ன குறிப்பிடுகையில், 'சுற்றுச்சூழல் அமைப்புகள் ஒழுங்காகச் செயற்பட பிராந்தியங்கள் ஒன்றிணைய வேண்டும்' என்றார். இத்திட்டத்தின் கீழ் ஊவா ஸ்டார்ட் அப்ஹப் மற்றும் யாழ் ஐடிஹப் என இரண்டு சுற்றுச்சூழல் அமைப்புகள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளன.

தென்பிராந்தியத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவென இரு நிறுவனங்களுக்கிடையிலான கூட்டாண்மையைக் குறிக்கும் வகையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைக்கும் தென்பிராந்தியத்தின் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மொனறாகலை ஆகிய மாவட்டங்களின் வர்த்தக சபைகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டன.

தொழில்நுட்ப அமைச்சு, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி மற்றும் மொனறாகலை ஆகிய ஐந்து மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, டயலொக் எக்ஸியாட்டா லிமிடெட், ஸ்ரீலங்கா டெலிகாம் மற்றும் மொபிடெல், பாரதி ஏர்டெல் லங்கா லிமிடெட், ஹட்சீசன்டெலிகாம் ஸ்ரீலங்கா, லங்காபெல் லிமிடெட். மென்பொருள் சேவை நிறுவனங்களின் சங்கம் (SLASSCOM), தகவல் தொழில்நுட்பக் கூட்டமைப்பு இலங்கை (FITIS), பிரிட்டிஷ் கம்ப்யூட்டர் சொசைட்டி (BCS), CSSL, SLINTEC, SLIBTEC, பாஷா லங்கா (பிரைவேட்) லிமிடெட் உள்ளிட்ட நிறுவனங்கள் அவற்றின் பிரதிநிதிகள் மற்றும் தென்பிராந்திய அரச, தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

பிராந்திய மட்டத்திற்கான இரண்டாவது கருத்தரங்கு தெற்கு பிராந்தியத்தில் அங்குரார்ப்பணம்

கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட முதல் கருத்தரங்கின் பின்னர் சிறந்த பிரதிபலன் வடக்கில் கிடைக்கப் பெற்றுள்ளது. ஐ.ஓ.டி ஆய்வகங்கள், கண்டுபிடிப்பு மையங்கள் மற்றும் இரண்டாம் நிலை டெக்னோ பூங்காக்கள் போன்ற சில முக்கிய முன்னேற்றங்களுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவே யாழ்ப்பாணத்தில் வணிக மையமாக உள்ளது" என்று அவர் குறிப்பிட்டார்.

மர்லின் மரிக்கார்...

ஒருபுறம் அமெரிக்கா, மறுபுறம் சீனா;

இரு வல்லரசுகளுக்குமே நட்புமுகம் காண்பிக்க முயலும் பாகிஸ்தான்!

பாகிஸ்தானின் வெளிவிவகாரக் கொள்கைகள் சில சமயம் புரிந்து கொள்ள முடியாதவையாக அமைந்து விடுகின்றன. அந்நாடு அமெரிக்காவின் நேசநாட்டு பட்டியலிலும் இருக்கும் அதேசமயம் அமெரிக்காவின் எதிரியான சீனாவுடன் நெருங்கி உறவாடவும் செய்கிறது.

தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், சில சமயம் தன் மண்ணிலேயே நாசகார வேலைகளில் ஈடுபடுவதாகவும் விளங்கக் கூடிய அயலக பயங்கரவாத இயக்கங்களை அந்நாடு போஷிக்கிறது. அவை தமது மண்ணில் இருந்து தன் நண்பனான அமெரிக்காவுக்கு எதிராக செயல்படவும் அனுமதிக்கிறது.

9/11 சூத்திரதாரியை உலகெங்கும் அமெரிக்கா தேடி வர, அவர் தமது மண்ணில்தான் பதுங்கி இருக்கிறார் என்பதை பாகிஸ்தான் ஒப்புக் கொள்ளவே இல்லை. அவரை அமெரிக்க அதிரடியாக வேட்டையாடும் வரை!

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் முல்லா ஒமர் தலைமையில் ஆட்சி செய்து வந்த போது, அமெரிக்கா ஆப்கான் விவகாரத்தில் தலையிடவில்லை. இரட்டைக் கோபுர தாக்குதலின் பின்னர் பின்லேடன் ஆப்கானில் மறைந்துள்ளார் என்பது தெரியவந்ததுமே அமெரிக்கத் தலையீடு ஆப்கானிஸ்தானில் ஆரம்பமானது.

பாகிஸ்தானை எடுத்துக் கொண்டால், ஏனோ தெரியவில்லை, பயங்கரவாதத்தின் விளைநிலமாக தன் மண்ணைப் பயன்படுத்திக் கொள்ள அது அனுமதித்து வரும் அதேசமயம், மேற்குலகுக்கு மற்றொரு முகத்தைக் காட்டவும் ஜனநாயக மாண்மியம் பற்றிப் பேசவும் முனைகிறது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இராணுவ வெற்றி பெறுவதற்கு பின்னணியில் இருந்தது பாகிஸ்தான் என்பது தெரிந்த விடயம்.

அமெரிக்கா சார்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்போரிடம் 'சமாதானமுயற்சிகளில்ஈடுபட்டிருக்கிறோம்' என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே, அமெரிக்கா ஆப்கானை விட்டு வெளியேறியதும் அந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற எல்லா வகையிலும் தலிபான்களுக்கு உதவி வந்ததும் அதே பாகிஸ்தான்தான்.

இன்னும் சொல்வதானால் பாகிஸ்தான் மண்ணில்தான் அமெரிக்கா 'ட்ரோன்' தாக்குதல்கள் நிகழ்த்தி பல அல்கைதா மற்றும் தலிபான் தலைவர்களை மண்ணில் சாய்த்தது. பலூசிஸ்தான் மாகாணத்தில் நடத்தப்பட்ட 'ட்ரோன்' தாக்குதலில்தான் தலிபானின் இரண்டாவது அமீரான முல்லா அக்தர் மன்சூர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல பாகங்களில் இடம்பெறும் பயங்கரவாதத் தாக்குதல்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் வேர்கள் பாகிஸ்தானில் பதிந்திருப்பதைக் காண முடியும். லக்ஷர் ஈ தொய்பா போன்ற பயங்கரவாத அமைப்புகள் அந்த மண்ணில் இருந்தே செயற்படுகின்றன. 2008 மும்பை தாக்குதலின் பின்னணியில் இருந்தது இப்பயங்கரவாத அமைப்பே. இத் தாக்குதலில் ஆறு அமெரிக்கப் பிரஜைகள் மாண்டனர். 9/11 தாக்குதலின் பிதாமகன்களில் ஒருவரான காலித் ஷேக் முஹம்மத் கைது செய்யப்பட்டது பாகிஸ்தான் மண்ணிலேயே. இவர் பாகிஸ்தான் வம்சாவளியாவார்.

பாகிஸ்தானுக்கு இப்படியொரு பின்னணி இருந்தும் கூட, 9/11 தாக்குதலின் பின்னர் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஏறத்தாழ 23 பில்லியன் டொலர்களை வழங்கியிருக்கிறது. எனினும் தலிபான்களுக்கான ஆதரவை பாக். விலக்கிக் கொள்ளவில்லை. பாகிஸ்தானின் குவேட்டா, கராச்சி மற்றும் பேஷாவார் ஆகிய இடங்களில் தலிபான்கள் வசிக்க பாகிஸ்தான் வசதி செய்து கொடுத்திருந்தது. இங்கிருந்தபடி இவர்கள் செய்ததெல்லாம் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல் நடத்தியதேயாகும்.

ஈரான், லிபியா, வடகொரியா ஆகிய நாடுகள் அணுவாயுத தயாரிப்பு தொழில்நுட்பத்தை பெற்றுக் கொண்டது பாகிஸ்தானில் இருந்தே. இதை அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை. அமெரிக்காவுக்கு எதிரான சக்திகள் பாகிஸ்தானில் இருந்து செயல்பட்டாலும் அந்நாட்டை அமெரிக்கா தன் கூட்டாளியாகக் கருதுவது விந்தையே.

அரபிக் கடல் மற்றும் பாரசீக்குடாவில் சீனக் கப்பல்கள் சஞ்சரிக்க பாகிஸ்தான் உதவுவதன் மூலம் அமெரிக்காவின் இந்தோ பசிபிக் மூலோபாயத்துக்கு வேட்டு வைக்கவே பாகிஸ்தான் முயல்கிறது.

பாகிஸ்தான் தொடர்பான அமெரிக்கக் கொள்கை தோல்வியடைந்துள்ள நிலையில், அமெரிக்க இராணுவ தொழில்நுட்பங்கள் பாகிஸ்தான் வழியாக சீனா சென்றடைவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. அமெரிக்காவின் CENTCOM இராணுவ அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் அமெரிக்க இராணுவ பயிற்சி மற்றும் இராணுவ தளபாடங்கள் தொடர்பிலான அறிவு பாகிஸ்தானுக்கு உண்டு. சீன சார்பு நாடு என்ற வகையில் இது அமெரிக்க இராணுவ நலன்களுக்கு உகந்தது அல்ல.



பாகிஸ்தானின் விசேஷம் என்னவென்றால், அது சீனாவின் நட்பு நாடாக இருக்கும் அதேசமயம், அமெரிக்காவின் நட்பு நாடாகக் காட்டிக் கொள்ளவும் செய்வதால் நேட்டோவின் பிரதான ஆதரவு நாடாகவும் அதனால் விளங்க முடிகிறது என்பதுதான்.

சீனாவில் இப்போது ஒரு இலட்சம் பாகிஸ்தான் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 60 பில்லியன் அமெரிக்க டொலர்களை பாகிஸ்தானில் சீனா முதலீடு செய்துள்ளது. பாகிஸ்தானின் உளவுத் துறையினருக்கு சீனா பயிற்சி வழங்கி வரும் அதேசமயம், சீன மக்கள் விடுதலை இராணுவத்துடன் பாகிஸ்தான் இராணுவம் நெருங்கி செயல்படவும் செய்கிறது.

இதேசமயம் அமெரிக்க பல்கலைக் கழகங்களில் 7939 பாகிஸ்தான் மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர். அமெரிக்க பாக். இரு தரப்பு வர்த்தகம் 6.6 பில்லியன் டொலர்களாகவே உள்ளது என்பது கவனிக்கத்தக்கது என்பதை இந்திய அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவர்களது பார்வையில் இந்திய உளவியலின் கலப்பும் இருக்குமென்றாலும் முன்னர் லிபியா செய்ததைப் போல வெளியக பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்தும் அடைக்கலமும் போஷணையும் அளித்து வரும் பட்சத்தில் இதன் பின்விளைவுகள் பாரதூரமானவையாகவும் அந்நாட்டுக்கே வளர்த்த கடா மார்பில் பாய்ந்த மாதிரி எதிராகத் திரும்பக் கூடிய வாய்ப்புகள் இருப்பதையும் மறந்து விடலாகாது.

சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டே அமெரிக்காவின் கூட்டாளியாகவும் இருக்க முயலும் பாகிஸ்தானின் நகர்வுகளை இராஜதந்திரம் என்று வகைப்படுத்த முடியும். அது எவ்வளவு தூரம் செல்லுபடியாகும் என்பது அந்நாட்டின் மேலதிக நகர்வுகளைப் பொறுத்தது. ஆனால் பயங்கரவாதத்துக்கும் தமது மண்ணில் இருந்து செயல்படுவதற்கும் இடமளிப்பது என்பது அனைத்து நாடுகளின் கரிசனைக்கு உட்பட்டது என்பதால், அந்நாட்டின் பிரதான கூட்டாளிகளில் ஒன்று என்ற வகையில் அமெரிக்கா மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியது அவசியம். அந்நாட்டை இது தொடர்பாக எச்சரிக்கும், தீவிரவாத விளைநிலமாக அந்நாடு தொடர்வதைத் தடுக்கக் கூடிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பும் தகுதியும் அமெரிக்காவுக்கே உள்ளது. பிராந்திய நாடுகளும் இதையே விரும்புகின்றன.

தீவிரவாத விளைநிலமாக பாக் மண் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிப்பது அமெரிக்க நலன்களுக்கு உகந்ததல்ல!

பீச் தரப்படுத்தல் AA- (LKA)

மக்கள் வங்கி

நிதிக் கூற்றுக்கள்

வருமானக் கூற்று

ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான

	வங்கி			வங்கி தொகுதி		
	2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020* (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	வளர்ச்சி %	2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020* (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	வளர்ச்சி %
மொத்த வருமானம்	**100,281,813**	**91,460,431**	9.6	**115,751,753**	**109,045,551**	6.1
வட்டி வருமானம்	94,876,305	86,567,821	9.6	107,584,839	101,171,755	6.3
வட்டிச் செலவினங்கள்	(55,272,797)	(60,687,270)	(8.9)	(60,778,695)	(68,086,255)	(10.7)
தேறிய வட்டி வருமானம்	**39,603,508**	**25,880,551**	53.0	**46,806,144**	**33,085,500**	41.5
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	4,003,443	2,821,878	41.9	4,599,662	3,266,061	40.8
கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள்	(261,079)	(234,011)	11.6	(261,079)	(234,011)	11.6
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**3,742,364**	**2,587,867**	44.6	**4,338,583**	**3,032,050**	43.1
வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/நட்டம்	959,618	1,680,436	(42.9)	1,046,150	1,732,239	(39.6)
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய)	442,447	390,296	13.4	2,521,102	2,875,496	(12.3)
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	**44,747,937**	**30,539,150**	46.5	**54,711,979**	**40,725,285**	34.3
பெறுமதி குறைப்பு கட்டணங்கள்	(7,817,834)	(9,447,203)	(17.2)	(7,500,654)	(13,806,111)	(45.7)
வாடிக்கையாளர் கடன்கள் மற்றும் வருமதிகள்	(7,745,885)	(10,025,063)		(7,105,111)	(13,982,847)	
ஏனைய நிதி சொத்துக்கள்	(71,949)	577,860		(71,949)	577,860	
ஏனையவை	-	-		(323,594)	(401,124)	
தேறிய தொழிற்பாட்டு வருமானம்	**36,930,103**	**21,091,947**	75.1	**47,211,325**	**26,919,174**	75.4
தனிப்பட்ட செலவினங்கள்	(11,988,175)	(9,525,322)	25.9	(14,617,595)	(11,556,525)	26.5
பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு	(2,166,821)	(2,028,238)	6.8	(2,516,998)	(2,704,627)	(6.9)
ஏனைய செலவினங்கள்	(5,937,976)	(6,211,983)	(4.4)	(7,960,631)	(7,651,187)	4.0
நிதி சேவைகளில் பெறுமதிசேர்க்கப்பட்ட வரிக்கு முன் தொழிற்பாட்டு இலாபம்	**16,837,131**	**3,326,404**	406.2	**22,116,101**	**5,006,835**	341.7
பேறுமதிசேர்க்கப்பட்ட வரி (நிதிச் சேவை)	(3,607,315)	(1,472,032)	145.1	(4,441,278)	(1,804,238)	146.2
நிதி சேவைகளில் பெறுமதிசேர்க்கப்பட்ட வரிக்கு பிறகு தொழிற்பாட்டு இலாபம்	13,229,816	1,854,372	613.4	17,674,823	3,202,597	451.9
இணை நிறுவனங்களில் இலாபம் நட்டங்களின் பங்கு	-	-	-	10,893	(12,472)	(187.3)
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	**13,229,816**	**1,854,372**	613.4	**17,685,716**	**3,190,125**	454.4
வருமான வரிச் செலவினங்கள்	(2,657,045)	(523,678)	407.4	(3,934,583)	(1,047,517)	275.6
காலப்பகுதிக்கான இலாபம்	**10,572,771**	**1,330,694**	694.5	**13,751,133**	**2,142,608**	541.8
பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:						
வங்கியின் உரிமையாளர்களுக்கு	10,572,771	1,330,694	694.5	12,818,411	1,818,844	604.8
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு	-	-		932,722	323,764	188.1
இலாபத்தின் மீதான பங்கு ஒன்றிற்கான வருவாய்	**10,572,771**	**1,330,694**	694.5	**13,751,133**	**2,142,608**	541.8
சாதாரண பங்கிற்கான அடிப்படை இலாபம்	10,573	1,331	694.5	12,818	1,819	604.8
சாதாரண பங்கிற்கான குன்றிய இலாபம்	43	5	694.5	53	7	604.8

*தற்போதைய கால விளக்கக்காட்சிக்கு இணங்க சில ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன

அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான

	வங்கி		வங்கி தொகுதி	
	2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது
காலப்பகுதிக்கான இலாபம்	**10,572,771**	**1,330,694**	**13,751,133**	**2,142,608**
ஏனைய பூரண வருமானம் வருமானக்கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாதவை				
ஏனைய பூரண வருமானத்தின் ஊடான உரிமை முதல் கருவிகளின் நியாய விலையில் தேறிய இலாபம்/நட்டம்	(29,344)	(288,861)	339	(207,702)
வரையறுக்கப்பட்ட காப்புத்திட்டங்கள் மீதான தேறிய உண்மை வருமானம் மற்றும் நட்டம்	-	-	107,453	1,138
மேற் குறிப்பிடப்பட்டவை மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு (வரிவித மாற்றம் உட்பட)	245,293	-	215,332	-
ஏனைய பூரண வருமானம் வருமானக்கூற்றில் மீள்வகைப்படுத்தப்படுபவை				
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான கடன் கருவிகள் தேறிய இலாப நட்டம் (ECLமாற்றம் உள்ளங்காண)	369	15,118	(8,940)	10,849
மேற் குறிப்பிடப்பட்டவை மீதான பிற்போடப்பட்ட வரி விளைவு	-	-	-	(4,762)
வெளிநாட்டு இயக்கங்கள் மீதான நிதி அறிக்கைகள் மாற்றீடுகள் மூலதன தேறிய இலாபம்/நட்டம்	-	-	218,699	63,214
காலப்குதிக்கான வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்	216,318	(273,743)	532,883	(137,263)
காலப்குதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்	**10,789,089**	**1,056,951**	**14,284,016**	**2,005,345**
பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:				
வங்கியின் பங்கு உரிமையாளர்களுக்கு	10,789,089	1,056,951	13,292,674	1,685,999
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு	-	-	991,342	319,346
	10,789,089	**1,056,951**	**14,284,016**	**2,005,345**

காசுப்பாய்ச்சல் கூற்று

ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான

	வங்கி		வங்கி தொகுதி	
	2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2021 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்				
வரிக்கு முன்னரான இலாபம்	**13,229,816**	**1,854,372**	**17,685,716**	**3,190,125**
சீராக்கங்கள்:				
வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள்	10,402,433	9,653,615	10,647,700	14,944,822
தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றங்கள்	(155,125,070)	(106,122,577)	(157,364,955)	(111,092,543)
தொழிற்பாடடு பொறுப்புக்களின் மாற்றங்கள்	216,800,511	107,162,094	216,242,486	106,243,466
துணை மற்றும் இணை கம்பனிகள் மூலமான பங்கு இலாபம்	(21,239)	(442)	(26,428)	(16,706)
துணைநிலைப் படுகடன்கள் மீதான வட்டிச் செலவு	2,463,325	1,415,270	3,274,071	2,456,670
வரையறுக்கப்பட்ட காப்புத் திட்டங்களுக்கு செலுத்திய பங்களிப்பு	1,644,500	1,252,045	1,644,500	1,252,045
வரி பொறுப்புக்களின் மாற்றம்	(3,029,472)	(2,678,807)	(3,979,204)	(3,689,928)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	86,364,804	12,535,570	88,123,886	13,287,951
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்				
ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் கொள்வனவுகள்	(922,776)	(385,499)	(1,271,475)	(1,260,435)
ஆதனம், பொறிகள், உபகரணங்களின் விற்பனை மூலம் பெறுகைகள்	1,034	4,812	1,181	4,884
நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு	(79,028,887)	8,803,309	(78,595,540)	10,488,911
அருவ சொத்துக்களின் தேறிய கொள்வனவு	(127,120)	(7,943)	(128,262)	(19,354)
துணை மற்றும் இணை கம்பனிகளிலான முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபம்	21,239	442	26,428	16,706
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட)	(80,056,510)	8,415,121	(79,967,668)	9,230,712
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்				
துணை கடனில் இருந்து பெறப்பட்ட வருமானம்	3,500,000	-	3,500,000	421,628
துணை கடனுக்கை செலுத்தப்படும் வட்டி	(818,750)	(818,750)	(2,019,627)	(2,456,670)
துணைநிலை படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு	(1,247,942)	(1,198,184)	(1,469,007)	(1,571,623)
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு செலுத்திய பங்கிலாபம்	-	-	(150,000)	(55,000)
உரிமை முதல்கருவிகள் உடமையாளர்களுக்கான விசேட தீர்வை பங்கிலாப கொடுப்பனவு	(609,845)	(1,609,845)	(609,845)	(1,609,845)
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	823,463	(3,626,779)	(748,479)	(5,271,510)
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	7,131,757	17,323,912	7,407,739	17,247,153
காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	71,461,242	50,703,158	72,899,208	51,594,638
காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச்சமனானவைகள்	**78,592,999**	**68,027,070**	**80,306,947**	**68,841,791**

வைப்புகள் பகுப்பாய்வு

	வங்கி		வங்கி தொகுதி	
	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது
உற்பத்தி ரீதியாக – உள்நாட்டு நாணயம்				
கேள்வி வைப்புக்கள் (நடப்பு கணக்குகள்)	70,952,884	73,516,730	70,227,517	72,417,368
சேமிப்பு வைப்புக்கள்	747,394,237	652,478,461	755,291,094	659,615,718
நிலையான வைப்புக்கள்	1,014,789,962	908,538,457	1,104,265,242	999,944,241
ஏனைய வைப்புக்கள்	3,983,339	3,341,966	6,630,778	5,992,871
உப தொகை	**1,837,120,422**	**1,637,875,614**	**1,936,414,631**	**1,737,970,198**
உற்பத்தி ரீதியாக – வெளிநாட்டு நாணயம்				
கேள்வி வைப்புக்கள் (நடப்பு கணக்குகள்)	1,004,445	1,618,808	1,004,445	1,618,808
சேமிப்பு வைப்புக்கள்	26,329,570	23,516,130	26,329,570	23,516,130
நிலையான வைப்புக்கள்	204,602,333	172,071,874	204,602,333	172,071,874
ஏனைய வைப்புக்கள்	58,699	17,030	58,699	17,030
உப தொகை	**231,995,047**	**197,223,842**	**231,995,047**	**197,223,842**
மொத்த தொகை	**2,069,115,469**	**1,835,099,456**	**2,168,409,678**	**1,935,194,040**

நிதி நிலைமைக் கூற்று

திகதிக்கு

	வங்கி			வங்கி தொகுதி		
	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	வளர்ச்சி %	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	வளர்ச்சி %
சொத்துக்கள்						
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	78,592,999	71,461,242	10.0	80,306,947	72,899,208	10.2
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	17,265,021	14,196,565	21.6	17,265,021	14,196,565	21.6
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	3,352,277	10,304,422	(67.5)	6,028,620	13,910,824	(56.7)
பெறுதி நிதியியல் சாதனங்கள்	404,138	97,645	313.9	404,138	97,645	313.9
நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயவிலையில்	30,196,518	46,425,027	(35.0)	34,158,988	52,728,589	(35.2)
நிதிச் சொத்துக்கள் – கடன் தீர்ப்பனவு கிரயத்தின்						
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	10,311,582	23,610,101	(56.3)	10,311,582	23,622,700	(56.3)
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	1,802,883,078	1,635,579,343	10.2	1,947,901,425	1,776,231,315	9.7
கடன் தீர்ப்பனவு செய்தில் பெறுமதியிடப்பட்ட கடன் கருவிகள்	435,249,766	357,107,701	21.9	443,609,170	365,900,452	21.2
நிதிச்சொத்துக்கள் – ஏனைய பூரண வருமானத்தின் ஊடான நியாய விலையில்						
ஏனைய பூரண வருமானத்தின் ஊடான உரிமை முதல் கருவிகள் நியாய விலையில்	1,908,105	1,937,778	(1.5)	2,202,460	1,778,585	23.8
ஏனைய பூரண வருமானத்தின் ஊடான கடன்களுவிகள் நியாய விலையில்	9,060,150	2,632,231	244.2	10,413,208	2,899,609	259.1
கூட்டுமுயற்சிகளிலான முதலீடுகள்	1,937,881	1,937,881	-	-	-	
இணை நிறுவனங்களில் முதலீடு	-	-	-	-	531,963	(100.0)
ஆதனங்களில் முதலீடு	1,260,486	1,261,338	(0.1)	1,256,647	1,257,499	(0.1)
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	37,293,096	38,405,839	(2.9)	47,061,826	48,101,865	(2.2)
நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள்	712,547	702,181	1.5	945,056	1,007,730	(6.2)
தேறிய பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்	1,541,307	695,424	121.6	1,545,284	699,401	120.9
ஏனைய சொத்துக்கள்	30,701,629	23,763,947	29.2	32,719,978	25,402,844	28.8
மொத்தச் சொத்துக்கள்	**2,462,670,580**	**2,230,118,665**	10.4	**2,636,130,350**	**2,401,266,794**	9.8
பொறுப்புக்கள்						
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	150,597,758	164,489,623	(8.4)	158,453,615	172,439,795	(8.1)
பெறுதி நிதியியல் சாதனங்கள்	474,071	976,486	(51.5)	474,071	976,486	(51.5)
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை	2,069,115,469	1,835,099,456	12.8	2,168,409,678	1,935,194,040	12.1
ஏனைய கடன்பாடுகள்	35,261,494	36,362,434	(3.0)	35,061,446	36,362,434	(3.6)
நடப்பு வரிப் பொறுப்புக்கள்	6,836,365	6,608,202	3.5	7,857,100	7,538,938	4.2
தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	-	-	-	1,772,611	1,504,843	17.8
ஏனைய பொறுப்புக்கள்	39,520,310	41,041,170	(3.7)	49,844,414	51,271,458	(2.8)
கீழ்நிலை தவணைப் படுகடன்கள்	48,702,271	43,557,696	11.8	61,622,479	56,868,035	8.4
மொத்தப் பொறுப்புக்கள்	**2,350,507,738**	**2,128,135,067**	10.4	**2,483,495,414**	**2,262,156,029**	9.8
பங்கு மூலதனம்						
கூறப்பட்ட மூலதனம் ஒதுக்கப்பட்ட மூலதனம்	12,201,998	12,201,998	-	12,201,998	12,201,998	-
நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம்	8,024,521	8,024,521	-	8,024,521	8,024,521	-
ஏனைய ஒதுக்கங்கள்	32,830,262	32,859,237	(0.1)	35,094,513	34,923,662	0.5
பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள்	59,106,061	48,897,842	20.9	84,780,654	72,268,676	17.3
பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம்	112,162,842	101,983,598	10.0	140,101,686	127,418,857	10.0
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்குரியது				12,533,250	11,691,908	7.2
மொத்த பங்கு மூலதனம்	112,162,842	101,983,598	10.0	152,634,936	139,110,765	9.7
மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்	**2,462,670,580**	**2,230,118,665**	10.4	**2,636,130,350**	**2,401,266,794**	9.8
எதிர்பார்ா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்	449,434,751	489,938,862	(8.3)	462,729,751	497,689,847	(7.0)
ஊழியர் எண்ணிக்கை	7,620	7,692		10,949	11,051	
கிளைகள் எண்ணிக்கை	741	741		857	848	

ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் பெறுமதி குறைப்பு பகுப்பாய்வு

	வங்கி		வங்கி தொகுதி	
	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்				
திரண்ட கடன்களும் வருமதிகளும் (கழி)	**1,898,729,444**	**1,723,465,943**	**2,055,201,661**	**1,876,212,559**
எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான ஏற்பாடுகள் / பெறுமதி குறைப்பு நட்டங்கள்	**(95,846,366)**	**(87,886,600)**	**(107,300,236)**	**(99,981,244)**
நிலை 1	(7,156,749)	(6,419,888)	(8,639,672)	(7,309,834)
நிலை 2	(7,727,723)	(3,533,121)	(9,321,717)	(5,250,002)
நிலை 3	(80,961,894)	(77,933,591)	(89,338,847)	(87,421,408)
தேறிய கடன்கள் மற்றும் வருமதிகள்	**1,802,883,078**	**1,635,579,343**	**1,947,901,425**	**1,776,231,315**
உற்பத்தி ரீதியாக கடன்கள் மற்றும் வருமதிகள்				
உற்பத்திகள் – உள்நாட்டு நாணயம்				
மேலதிக பற்றுக்கள்	358,676,893	255,582,926	358,390,096	255,251,696
தவணைக் கடன்கள்	855,556,884	798,475,437	921,247,996	856,494,308
குத்தகை வாடகை வருமதிகள்	-	-	76,217,217	81,891,112
கடனட்டைகள்	3,303,388	3,067,432	3,303,388	3,067,432
அடகுகள்	181,733,657	174,814,192	181,733,657	174,814,192
வியாபார நிதி	52,106,681	36,650,482	52,106,681	36,650,482
ஏனைய கடன்கள்	26,239,971	25,342,192	36,529,049	34,893,620
உப தொகை	**1,477,617,474**	**1,293,932,661**	**1,629,528,084**	**1,443,062,842**
உற்பத்திகள் – வெளிநாட்டு நாணயம்				
மேலதிக பற்றுக்கள்	3,108,077	2,698,968	3,108,077	2,698,968
தவணைக் கடன்கள்	181,255,947	212,589,823	185,817,554	216,206,258
வியாபார நிதி	236,747,946	214,244,491	236,747,946	214,244,491
உப தொகை	**421,111,970**	**429,533,282**	**425,673,577**	**433,149,717**
மொத்த தொகை	**1,898,729,444**	**1,723,465,943**	**2,055,201,661**	**1,876,212,559**

வருடத்தினுள் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களுக்கான (குறைமதிப்பு) மாற்றங்கள்

வங்கி	நிலை 1	நிலை 2	நிலை 3	மொத்தம்
2021.01.01 திகதி ஆரம்ப மீதி	6,419,888	3,533,121	77,933,591	87,886,600
வருடத்துக்கான அறவீடு (மறுதலை)	736,861	4,194,602	2,814,422	7,745,885
வருடத்துக்கான பதிவளிக்கப்பட்டவை	-	-	(83,581)	(83,581)
வெளிநாட்டு நாணயங்கள் குறைப்பு ஏற்பாடுகள் மீதான நாணய மாற்றுலீத மாற்றம்	-	-	297,462	297,462
2021.06.30 திகதி இறுதி மீதி	7,156,749	7,727,723	80,961,894	95,846,366

வங்கி	நிலை 1	நிலை 2	நிலை 3	மொத்தம்
2020.01.01 திகதி ஆரம்ப மீதி	5,036,021	1,442,409	69,851,947	76,330,377
வருடத்துக்கான அறவீடு (மறுதலை)	1,383,867	2,090,712	8,353,847	11,828,426
வருடத்துக்கான பதிவளிக்கப்பட்டவை	-	-	(412,843)	(412,843)
வெளிநாட்டு நாணயங்கள் குறைப்பு ஏற்பாடுகள் மீதான நாணய மாற்றுலீத மாற்றம்	-	-	140,640	140,640
2020.12.31 திகதி இறுதி மீதி	6,419,888	3,533,121	77,933,591	87,886,600

வங்கி தொகுதி	நிலை 1	நிலை 2	நிலை 3	மொத்தம்
2021.01.01 திகதி ஆரம்ப மீதி	7,309,834	5,250,002	87,421,408	99,981,244
வருடத்துக்கான அறவீடு (மறுதலை)	1,329,838	4,071,715	1,703,558	7,105,111
வருடத்துக்கான பதிவளிக்கப்பட்டவை	-	-	(83,581)	(83,581)
வெளிநாட்டு நாணயங்கள் குறைப்பு ஏற்பாடுகள் மீதான நாணய மாற்றுலீத மாற்றம்	-	-	297,462	297,462
2021.06.30 திகதி இறுதி மீதி	8,639,672	9,321,717	89,338,847	107,300,236

வங்கி தொகுதி	நிலை 1	நிலை 2	நிலை 3	மொத்தம்
2020.01.01 திகதி ஆரம்ப மீதி	5,693,729	2,178,583	75,356,837	83,229,149
வருடத்துக்கான அறவீடு (மறுதலை)	1,616,105	3,071,419	12,336,774	17,024,298
வருடத்துக்கான பதிவளிக்கப்பட்டவை	-	-	(412,843)	(412,843)
துணை நிறுவனங்களின் அகற்றலாக கருதப்படுவது.	-	-	140,640	140,640
2020.12.31 திகதி இறுதி மீதி	7,309,834	5,250,002	87,421,408	99,981,244

கடப்பாடுகள் மற்றும் வருநிகழ்வுகள் பகுப்பாய்வு

	வங்கி		வங்கி தொகுதி	
	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது
உற்பத்தி ரீதியாக				
ஏற்றுக்கொள்ளல்கள்	108,033,174	53,034,225	108,033,174	53,034,225
ஆவணக் கடன்	63,206,723	74,557,296	63,206,723	74,557,296
உத்தரவாதங்கள்	78,662,947	74,750,532	79,406,947	75,581,653
முன்னோக்கிய நாணயமாற்று வீத ஒப்பந்தங்கள்	79,346,917	112,418,576	79,346,917	112,418,576
வழங்கப்படாத மேலதிகபற்றுக்கள் மற்றும் கடன்கள்	120,834,447	175,725,812	133,385,447	182,645,676
மொத்த சாப்பாடுகள் மற்றும் வருநிகழ்வுகள்	**450,084,208**	**490,486,441**	**463,379,208**	**498,237,426**
கழி – கடப்பாடுகள்				
எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்கள்	(649,457)	(547,579)	(649,457)	(547,579)
தேறிய கடப்பாடுகள் மற்றும் வருநிகழ்வுகள்	**449,434,751**	**489,938,862**	**462,729,751**	**497,689,847**

பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

வங்கி

ஜூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான

	கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம்		ஒதுக்கங்கள்					மொத்தம்
	சாதாரண பங்குகள் (ரூ. '000)	ஒதுக்கப்பட்ட மூலதனம் (ரூ. '000)	நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் (ரூ. '000)	மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் (ரூ. '000)	வேறு ஒதுக்கங்கள் (ரூ. '000)	FVOCI ஒதுக்கங்களினை நிதியியல் சொத்துக்கள் (ரூ. '000)	தக்கவைக்கப்பட்ட கூற்று (ரூ. '000)	(ரூ. '000)
01.01.2020 இல் மீதி	49,998	12,152,000	7,315,774	14,051,911	12,700,465	616,166	48,078,126	94,964,440
ஆண்டுக்கான மொத்த பூரண இலாபம்	-	-	-	-	-	-	-	-
ஆண்டுக்கான இலாபம்	-	-	-	-	-	-	14,174,943	14,174,943
ஏனைய பூரண வருமானம்/செலவு (வரி நீங்கலான)	-	-	-	4,697,022	-	(80,191)	(8,748,946)	(4,132,115)
மொத்த பூரண வருமானம்/செலவு	-	-	-	4,697,022	-	(80,191)	5,425,997	10,042,828
உரிமை முதல் உடமையாளர்களுடான கொடுக்கல் வாங்கல், உரிமை முதலுடன் நேரடியாக பிரிந்துரைக்கப்படுபவை	-	--	-	-	-	-	-	-
வருடத்தினுள் ஒதுக்கங்களுக்கான மாற்றம்	-	-	708,747	-	873,864	-	(1,582,611)	-
திறைசேரிக்கான விசேட தீர்வை/பங்கிலாபம்	-	-	-	-	-	-	(3,023,670)	(3,023,670)
உரிமை முதல் உடமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்	-	-	708,747	-	873,864	-	(4,606,281)	(3,023,670)
31.12.2020 இல் மீதி	49,998	12,152,000	8,024,521	18,748,933	13,574,329	535,975	48,897,842	101,983,598
01.01.2021 இல் மீதி	49,998	12,152,000	8,024,521	18,748,933	13,574,329	535,975	48,897,842	101,983,598
காலப்பகுதிக்கான மொத்த பூரண இலாபம்	-	-	-	-	-		-	-
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	-	-	-		10,572,771	10,572,771
ஏனைய பூரண வருமானம்/செலவு (வரி நீங்களாக)	-	-	-	-	-	(28,975)	245,293	216,318
மொத்த பூரண வருமானம்/செலவு	-	-	-	-	- -	(28,975)	10,818,064	10,789,089
உரிமை முதல் உடமையாளர்களுடான கொடுக்கல் வாங்கல், உரிமை முதலுடன் நேரடியாக பிரிந்துரைக்கப்படுபவை	-	-	-	-	-	-	-	-
திறைசேரிக்கான விசேட அறவீடு/பங்கிலாபம்	-	-	-	-	-	-	(609,845)	(609,845)
உரிமை முதல் உடமையாளர்களுடான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	-	-	-	-	-	-	(609,845)	(609,845)
30.06.2021 இல் மீதி	49,998	12,152,000	8,024,521	18,748,933	13,574,329	507,000	59,106,061	112,162,842

வங்கி தொகுதி

	கூறப்பட்ட மூலதனம் ஒதுக்கப்பட்ட மூலதனம்		ஒதுக்கங்கள்				தக்கவைக்கப்பட்ட வருவாய் (ரூ. '000)	மொத்தம் (ரூ. '000)	கட்டுப்படுத்தாத உரிமை (ரூ. '000)	மொத்தப் பங்கு மூலதனம் (ரூ. '000)
	சாதாரண பங்குகள் (ரூ. '000)	ஒதுக்கப்பட்ட மூலதனம் (ரூ. '000)	நிரந்தர ஒதுக்கங்கள் (ரூ. '000)	மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் (ரூ. '000)	வேறு ஒதுக்கங்கள் (ரூ. '000)	நியதிக்கப்பட்ட ஒதுக்க நிதியம் (ரூ. '000)				
01.01.2020 இல் மீதி	49,998	12,152,000	7,315,774	15,863,971	12,934,746	498,755	70,339,829	119,155,073	10,860,660	130,015,733
ஆண்டுக்கான மொத்த பூரண இலாபம்	-	-	-	-	-	-	-	-	-	-
ஆண்டுக்கான இலாபம்	-	-	-	-	-	-	15,229,858	15,229,858	860,628	16,090,486
ஏனைய பூரண வருமானம்/செலவு (வரி நீங்கலாக)	-	-	-	4,724,022	34,251	(5,947)	(8,694,730)	(3,942,404)	25,620	(3,916,784)
மொத்த பூரண வருமானம்/செலவு	-	-	-	4,724,022	34,251	(5,947)	6,535,128	11,287,454	886,248	12,173,702
உரிமை முதல் உடமையாளர்களுடான கொடுக்கல் வாங்கல், உரிமை முதலுடன் நேரடியாக பிரிந்துரைக்கப்படுபவை	-	-	-	-	-	-	-	-	-	-
வருடத்தினுள் ஒதுக்கங்களுக்கான மாற்றம்	-	-	708,747	-	873,864	-	(1,582,611)	-	-	-
திறைசேரிக்கான விசேட தீர்வை/பங்கிலாபம்	-	-	-	-	-	-	(3,023,670)	(3,023,670)	-	(3,023,670)
பங்கிலாப கொடுப்பனவு	-	-	-	-	-	-	-	-	(55,000)	(55,000)
உரிமை முதல் உடமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்	-	-	708,747	-	873,864	-	(4,606,281)	(3,023,670)	(55,000)	(3,078,670)
31.12.2020 இல் மீதி	49,998	12,152,000	8,024,521	20,587,993	13,842,861	492,808	72,268,676	127,418,857	11,691,908	139,110,765
01.01.2021 இல் மீதி	49,998	12,152,000	8,024,521	20,587,993	13,842,861	492,808	72,268,676	127,418,857	11,691,908	139,110,765
காலப்பகுதிக்கான மொத்த பூரண இலாபம்					-	-	-	-	-	-
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	-	-	-	-	12,818,411	12,818,411	932,722	13,751,133
ஏனைய பூரண வருமானம்/செலவு (வரி நீங்கலாக)	-	-	-	-	164,024	6,827	303,412	474,263	58,620	532,883
மொத்த பூரண வருமானம்/செலவு	-	-	-	-	164,024	6,827	13,121,823	13,292,674	991,342	14,284,016
உரிமை முதல் உடமையாளர்களுடான கொடுக்கல் வாங்கல், உரிமை முதலுடன் நேரடியாக பிரிந்துரைக்கப்படுபவை										
திறைசேரிக்கான விசேட அறவீடு/பங்கிலாபம்	-	-	-	-	-	-	(609,845)	(609,845)	-	(609,845)
பங்கிலாப கொடுப்பனவு	-	-	-	-	-	-	-	-	(150,000)	(150,000)
உரிமை முதல் உடமையாளர்களுடான மொத்த கொடுக்கல் வாங்கல்கள்	-	-	-	-	-	-	(609,845)	(609,845)	(150,000)	(759,845)
30.06.2021 இல் மீதி	49,998	12,152,000	8,024,521	20,587,993	14,006,885	499,635	84,780,654	140,101,686	12,533,250	152,634,936

நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பு

வங்கி - 2021 ஜூன் 30 ஆம் திகதிக்கு

	இலாபம் மற்றும் நட்டத்தி ஊடாக நியாயவிலை (ரூ. '000)	OCI ஊடாக நியாய விலை (ரூ. '000)	கடன் தீர்ப்பனவுச் செலவு (ரூ. '000)	மொத்தம் (ரூ. '000)
சொத்துக்கள்				
காக மற்றும் காசுக்குச் சமமானவைகள்	-	-	78,592,999	78,592,999
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	-	-	17,265,021	17,265,021
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	-	-	3,352,277	3,352,277
பெறுதி நிதியியல் சாதனங்கள்	404,138	-	-	404,138
நிதிச்சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில்	30,196,518	-	-	30,196,518
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	-	10,311,582
கடன்கள் மற்றும் வருமதிகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கானவை	-	-	10,311,582	1,802,883,078
கடன் தீர்ப்பனவு கிரயத்தில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்	-	-	1,802,883,078	435,249,766
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் உரிமை முதல் கருவிகள்	-	1,908,105	435,249,766	1,908,105
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் கடன் கருவிகள்	-	9,060,150		9,060,150
மொத்த நிதியியல் சொத்துக்கள்	30,600,656	10,968,255	2,347,654,723	2,389,223,634
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	-	-	150,597,758	150,597,758
பெறுதி நிதியியல் சாதனங்கள்	474,071	-	-	474,071
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	-	-	2,069,115,469	2,069,115,469
ஏனைய கடன்பாடுகள்	-	-	35,261,494	35,261,494
வழங்கப்பட்ட படுகடன் பிணைகள்	-	-	48,702,271	48,702,271
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	474,071	-	2,303,676,992	2,304,151,063

நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பு

குழு - 2021 ஜூன் 30 ஆம் திகதிக்கு

	இலாபம் மற்றும் நட்டத்தி ஊடாக நியாயவிலை (ரூ. '000)	OCI ஊடாக நியாய விலை (ரூ. '000)	கடன் தீர்ப்பனவுச் செலவு (ரூ. '000)	மொத்தம் (ரூ. '000)
சொத்துக்கள்				
காக மற்றும் காசுக்குச் சமமானவைகள்	-	-	80,306,947	80,306,947
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	-	-	17,265,021	17,265,021
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	404,138	-	6,028,620	6,028,620
பெறுதி நிதியியல் சாதனங்கள்	34,158,988	-	-	404,138
நிதிச்சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில்	-	-	-	34,158,988
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	10,311,582	10,311,582
கடன்கள் மற்றும் வருமதிகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கானவை	-	-	1,947,901,425	1,947,901,425
கடன் தீர்ப்பனவு கிரயத்தில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்	-	-	443,609,170	443,609,170
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் உரிமை முதல் கருவிகள்	-	2,202,460	-	2,202,460
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் கடன் கருவிகள்	-	10,413,208	-	10,413,208
மொத்த நிதியியல் சொத்துக்கள்	34,563,126	12,615,668	2,505,422,765	2,552,601,559
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	-	-	158,453,615	158,453,615
பெறுதி நிதியியல் சாதனங்கள்	474,071	-	-	474,071
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	-	-	2,168,409,678	2,168,409,678
ஏனைய கடன்பாடுகள்	-	-	35,061,446	35,061,446
துணைநிலை கால கடன்கள்	-	-	61,622,479	61,622,479
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	474,071	-	2,423,547,218	2,424,021,289

நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பு

வங்கி - 2020 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு

	இலாபம் மற்றும் நட்டத்தி ஊடாக நியாயவிலை (ரூ. '000)	OCI ஊடாக நியாய விலை (ரூ. '000)	கடன் தீர்ப்பனவுச் செலவு (ரூ. '000)	மொத்தம் (ரூ. '000)
சொத்துக்கள்				
காக மற்றும் காசுக்குச் சமமானவைகள்	-	-	71,461,242	71,461,242
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	-	-	14,196,565	14,196,565
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	-	-	10,304,422	10,304,422
பெறுதி நிதியியல் சாதனங்கள்	97,645	-	-	97,645
நிதிச்சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில்	46,425,027	-	-	46,425,027
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	23,610,101	23,610,101
கடன்கள் மற்றும் வருமதிகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கானவை	-	-	1,635,579,343	1,635,579,343
கடன் தீர்ப்பனவு கிரயத்தில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்	-	-	357,107,701	357,107,701
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் உரிமை முதல் கருவிகள்	-	1,937,778	-	1,937,778
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் கடன் கருவிகள்	-	2,632,231	-	2,632,231
மொத்த நிதியியல் சொத்துக்கள்	46,522,672	4,570,009	2,112,259,374	2,163,352,055
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	-	-	164,489,623	164,489,623
பெறுதி நிதியியல் சாதனங்கள்	976,486	-	-	976,486
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	-	-	1,835,099,456	1,835,099,456
ஏனைய கடன்பாடுகள்	-	-	36,362,434	36,362,434
வழங்கப்பட்ட படுகடன் பிணைகள்	-	-	43,557,696	43,557,696
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	976,486	-	2,079,509,209	2,080,485,695

நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பு

குழு - 2020 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு

	இலாபம் மற்றும் நட்டத்தி ஊடாக நியாயவிலை (ரூ. '000)	OCI ஊடாக நியாய விலை (ரூ. '000)	கடன் தீர்ப்பனவுச் செலவு (ரூ. '000)	மொத்தம் (ரூ. '000)
சொத்துக்கள்				
காக மற்றும் காசுக்குச் சமமானவைகள்	-	-	72,899,208	72,899,208
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	-	-	14,196,565	14,196,565
வங்கிகளிலுள்ள இருப்புக்கள்	-	-	13,910,824	13,910,824
பெறுதி நிதியியல் சாதனங்கள்	97,645	-	-	97,645
நிதிச்சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில்	52,728,589	-	-	52,728,589
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள்	-	-	23,622,700	23,622,700
கடன்கள் மற்றும் வருமதிகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கானவை	-	-	1,776,231,315	1,776,231,315
கடன் தீர்ப்பனவு கிரயத்தில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்	-	-	365,900,452	365,900,452
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் உரிமை முதல் கருவிகள்	-	1,778,585	-	1,778,585
ஏனைய பூரண வருமானம் ஊடான நியாய விலையில் கடன் கருவிகள்	-	2,899,609	-	2,899,609
மொத்த நிதியியல் சொத்துக்கள்	52,826,234	4,678,194	2,266,761,064	2,324,265,492
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	-	-	172,439,795	172,439,795
பெறுதி நிதியியல் சாதனங்கள்	976,486	-	-	976,486
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	-	-	1,935,194,040	1,935,194,040
ஏனைய கடன்பாடுகள்	-	-	36,362,434	36,362,434
துணைநிலை கால கடன்கள்	-	-	56,868,035	56,868,035
மொத்த நிதியியல் பொறுப்புக்கள்	976,486	-	2,200,864,304	2,201,840,790

தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள்

	வங்கி		வங்கி தொகுதி	
	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது
ஒழுங்குபடுத்துதல் போதுமான மூலதனம்				
அடிப்படை மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்), (ரூபா 000)	83,992,061	79,604,100	114,745,742	109,596,440
அடுக்கு 1 மூலதனம் (ரூபா 000)	87,492,061	79,604,100	118,245,742	109,596,440
மொத்த மூலதனம் (ரூபா 000)	135,679,226	129,271,791	168,374,000	160,292,747
ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம்				
பொதுவான மூலதனம் அடுக்கு 1 விகிதம் (குறைந்த 7.0%)	9.50	9.53	10.70	10.69
அடுக்கு 1 மூலதன விகிதம் (குறைந்த 8.5%)	9.90	9.53	11.03	10.69
மொத்த மூலதன விகிதம் (குறைந்த 12.5%)	15.35	15.47	15.71	15.63
சொத்துக்களின் தரம் (கடன் சொத்துப்பட்டியலின் தரம்)				
திரண்ட செயற்படாக் கடன்களின் விகிதம், % (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக)	3.42	3.25	3.88	3.89
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம், % (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஒதுக்கம் நீங்கலாக)	1.88	1.74	1.92	1.87
இலாபத்தன்மை				
வட்டி எல்லை, %	3.38	2.97	3.72	3.34
சொத்துக்களிலிருந்தான வருவாய் (வரிக்கு முந்திய), %	1.13	1.03	1.40	1.11
பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய், (வரிக்கு பிந்திய) %	19.75	14.39	18.85	11.96

	வங்கி		வங்கி தொகுதி	
	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது	2021.06.30 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்படாதது	2020.12.31 (ரூ. '000) கணக்காய்வு செய்யப்பட்டது
இணைப்பு விகிதம் (குறைந்த பட்சத் தேவைப்பாடு 3%)	3.39	3.43	4.30	4.40
ஒழுங்குமுறைப்படுத்தல் நிரவத்தன்மை				
நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள்				
உள்நாட்டு வங்கியியல் அலகு ரூ. 000	566,976,950	463,930,635		
கரைகடந்த வங்கியியல் அலகு USD 000	773,473	1,165,688		
நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் % (குறைந்தபட்சத் தேவைப்பாடு, 20%)				
உள்நாட்டு வங்கியியல் அலகு %	27.19	25.61		
கரைகடந்த வங்கியியல் அலகு %	45.76	60.46		
உயர்தர திரவச் சொத்துக்களின் ஒதுக்கம் (ரூ. 000)	496,599,502	434,450,384		
திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் % (குறைந்தபட்சத் தேவை, 90%)				
திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் - ரூபாய்	143.67	166.82		
திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் - அனைத்து நாணயங்களும்	111.79	111.55		
நிகர நிலையான நிதி விகிதம் (குறைந்தபட்சத் தேவை, 90%)	136.76	135.42		

அத்தாட்சிப்படுத்துகை:

வங்கியின் நிதிப் பிரிவின் தலைவர், தலைவர், பிரதான நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர், ஆகிய கீழ் கையொப்பமிடப்பட்ட நாங்கள் கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:
(அ) இலங்கை மத்திய வங்கியால் பிரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பிரிந்துரைக்கப்பட்ட வடிவங்களுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன;
(ஆ) இக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பமிடப்பட்டது)
அசாம் ஏ. அஹமட்
நிதிப்பிரிவு தலைவர்

(கையொப்பமிடப்பட்டது)
சுஜீவ ராஜபக்ஷ
தலைவர்

(கையொப்பமிடப்பட்டது)
சுதர்ஷன் அஹங்கம
பணிப்பாளர்

(கையொப்பமிடப்பட்டது)
ரஞ்ஜித் கொடிதுவக்கு
பிரதான நிறைவேற்று அதிகாரி/
பொது முகாமையாளர்

30.08.2021
கோழும்பு

PEOPLE'S BANK

பொலிஸாரை தாக்கிய சந்தேக நபர் கைது!

புத்தளம் வண்ணாத்துவில்லுவில் சம்பவம்

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரை நேற்று முன்தினம் (29) கைது செய்யச் சென்ற பொலிஸார் இருவர் மீது, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நபர் தாக்குதல் நடத்தியதால் இரு பொலிஸார் வண்ணாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தின் வண்ணாத்தவில்லு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரே தாக்குதலுக்குள்ளாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வண்ணாத்துவில்லு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 14ஆம் கட்டைப் பிரதேசத்தில் வைத்து இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரும் சிறிய காயங்களுக்குள்ளாகி வண்ணாத்துவில்லு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரையும் தாக்கியதாக கூறப்படும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக வண்ணாத்துவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த வண்ணாத்துவில்லு பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆதிவாசி தலைவர்... 03ஆம் பக்க தொடர்...

தலைவர் ஊறுவரிகே வன்னில அத்தோ, அவரது மனைவி ஆகிய இருவரும் மஹியங்கனை ஆஸ்பத்திரியின் கொரோனா தொற்றுப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனையோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

75 வீதமானோருக்கு தடுப்பூசி...

கர்ப்பிணித் தாய்மாருக்கு தடுப்பூசிகளை வழங்கும் வாரம் தற்போது நடைமுறையில் உள்ள நிலையில் பெருமளவிலான கர்ப்பிணித் தாய்மார்கள் இதுவரை தமக்கான தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாத கர்ப்பிணித் தாய்மார்கள் தமது பிரதேசத்தில் உள்ள தடுப்பூசி நிலையம் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் அல்லது ஆஸ்பத்திரிகளுக்கு சென்று தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுமானால் அதன் பாதிப்பு அதிகமாக காணப்படும் என்றும் இதுவரை நாட்டில் 32 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது மிகவும் மோசமான நிலைமை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் தற்போது 900 கொரோனா வைரஸ் தொற்று கர்ப்பிணித் தாய்மார்கள் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் இருந்து இதுவரை நாடளாவிய ரீதியில் 4,200 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இந்த தகவலை வழங்கினார். (ஸ)

நாளை முதல் சிவப்பு சீனி... 03ஆம் பக்க தொடர்...

பெருந்தொகை நெல்லை மறைத்து வைத்துள்ளவர்கள் தொடர்பில் விஷேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்படாத 52 களஞ்சிய சாலைகளை இதுவரை சீல் வைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

இதுவரை தொற்று உறுதி... 03ஆம் பக்க தொடர்...

உறுப்பினர்களான அமைச்சர் பந்துல குணவர்தன, ஜானக வக்கும்புர மற்றும் அசங்க நவரத்ன ஆகியோர் மாத்திரமே சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

தத்தமது நிர்வாகப்... 03ஆம் பக்க தொடர்...

25 ஆயிரத்து 787 பேருக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில் 71இலட்சத்து 73 ஆயிரத்து 120 பேருக்கு நேற்றுவரை இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் இதுவரை 2 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளோரின் எண்ணிக்கை 71இலட்சத்து 73 ஆயிரத்து 120 பேர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

ஐ.தே.க முன்னாள் எம்.பி டியூட்டர் ...

ஜே.ஆர். ஜெயவர்தனவின் தீவிர ஆதரவாளரான டியூட்டர் குணசேகர, 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் மஹர தேர்தல் தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்றுக்கு தெரிவாகியிருந்தார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் கருத்துக்கு...

முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களாக நல்லாட்சி அரசாங்கத்தில் வெறுமனே அமைச்சர் பதவியை வகித்து வந்த மனோ கணேசன் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தமிழ்மக்களுக்காக செய்ததே இல்லை. மாறாக தன்னையும் தனது கட்சி சார்ந்த சிலரையும் மட்டுமே கவனித்து வந்துள்ளார். இன்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தமிழ் மக்களுக்காக நல்ல விடயங்களை செய்ய முன்வருகையில் அதனை தடுக்கும் வகையில் சிறுபிள்ளைத்தனமாக அறிக்கைகளை விட்டு வருகின்றார். இதனை அவர் உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும் நடராஜா ரவிக்குமார் கேட்டுள்ளார். எந்த நேரமும் முகநூலில் தன்னைத் தானே புகழ்ந்து பாடுவதும், அதனைச் சிலரை வைத்து லைக் போட வைத்து வரவேற்பது மாகவே அவரது பொழுது போய்க் கொண்டிருக்கிறது. எனவே அவர் அரசாங்கம் செய்யும் நல்ல விடயங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் அல்லது மௌனமாக இருந்து தமிழ் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் ரவிக்குமார் கேட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் நல்லாட்சி அரசாங்கம் ஒரு சிறு துண்டு காணிகளேயே விடுவித்தது. ஆனால் யுத்தத்தின் பின்னர் ஆரம்ப காலத்திலிருந்து இன்று மீண்டும் ஆட்சியை பொறுப்பேற்ற பின்னர் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் காணிகளை 90 வீதம் விடுவித்துள்ளது. இதனைப் பொறுக்க முடியாத மனோகணேசன் போன்றவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டு அறிக்கைகளை விட்டு வருகின்றார்கள். இதனை அவர்கள் நிறுத்த வேண்டுமெனவும் ரவிக்குமார் கேட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஏதாவது சிறுவிடயத்தையாவது தமிழ்மக்களுக்காக செய்திருந்தால் அறிக்கை விடுவதில் நியாயமிருக்கிறது. ஆனால் அப்போது எதுவுமே செய்யாது விட்டு இப்போது அறிக்கை விடுவது அநாகரிகமான செயலெனவும் ரவிக்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தான் மட்டுமல்ல வடக்கு கிழக்கு சமூகத்தைச் சேர்ந்த பலர் மனோ கணேசனது செயலை வன்மையாக கண்டிப்பதாகவும் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி பெற மறுத்தால்...

வேண்டும். இதை நாட்டு மக்களால் மட்டுமே தடுக்க முடியும். அவசரத் தேவை தவிர வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாமென அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், முகக்கவசம் அணியாதவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் போது கொவிட்டை கட்டுப்படுத்த முடியாது. எனவே ஒவ்வொருவரும் சுய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

ரிஷாத்தின் மனைவி,மாமனாரின்...

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாக கடமையாற்றிய வந்த டயகம சிறுமி மர்மமான முறையில் தீகாயங்களுக்குள்ளாகி மரணமான சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே, இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குமாறு மூன்று தடவைகள் விடுக்கப்பட்ட கோரிக்கையை, நீதிமன்றம், மூன்று தடவைகளும் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

டோக்கியோ பராலிம்பிக்கில்...

16ஆவது பராலிம்பிக் விளையாட்டு விழா நடைபெற்று வருகிறது.

இதில் போட்டிகளில் ஆறாவது நாளான நேற்றுக் காலை நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் F46 இறுதிப் போட்டியில் இலங்கை வீரர் தினேஷ் பிரியன்த ஹேரத் பங்கு கொண்டார்.

ஆறு சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியின் முதல் முயற்சியில் 62.58 மீற்றர் தூரம் வீசி, தனது அதிசிறந்த தூரத்தைப் பதிவுசெய்த தினேஷ், அதன்பின்னர் இரண்டாவது முயற்சியில் 62.19 மீற்றர் தூரம் வீசினார். இதனையடுத்து மூன்றாவது முயற்சியில் 67.79 மீற்றர் தூரம் வீசிய அவர், புதிய உலக சாதனை படைத்தார். முன்னதாக இந்தியாவின் தேவேந்திர 2016 ரியோ ஒலிம்பிக்கில் நிகழ்த்திய உலக சாதனையை (63.97 மீற்றர்) நான்கு மீற்றரால் தினேஷ் முறியடித்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

நான்காவது முயற்சியில் 62.06 மீற்றர் தூரத்தை தினேஷ் பதிவு செய்தாலும் ஐந்தாவது முயற்சியில் ஏமாற்றம் அளித்தார். இறுதியில் தன்னுடைய அதிகபட்சமான 67.79 மீற்றர் தூரத்துடன் இலங்கை வீரர் தினேஷ் பிரியன்த தங்கப் பதக்கத்தை வென்றார். இறுதியாக 2016 ரியோ பராலிம்பிக்கில் தினேஷ் பிரியன்த வெண்கலப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாராலிம்பிக் வரலாற்றில் இலங்கை தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்று புதிய சாதனை படைத்தது. முன்னதாக, 2012 லண்டன் பாராலிம்பிக்கில் பிரதீப் சஞ்சன, ஆண்களுக்கான T46 பிரிவு 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், 2016 ரியோ பராலிம்பிக்கில் ஆண்களுக்கான F46 பிரிவு ஈட்டி எறிதலில் தினேஷ் பிரியன்த வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர்.

டோக்கியோ பராலிம்பிக்கில் தினேஷ் பிரியன்த தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் பதக்கப் பட்டியலில் இலங்கை 42ஆவது இடத்துக்கு முன்னேறியது.

தினேஷுடன் குறித்த போட்டியில் பங்குகொண்ட நடப்பு உலக மற்றும் ஒலிம்பிக் சம்பியனான இந்தியாவின் தேவேந்திர 64.35 மீற்றர் தூரத்தை எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், மற்றுமொரு இந்திய வீரரான குர்ஜார் சுந்தர் சிங் 64.01 மீற்றர் தூரத்தை எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

நுவரெலியாவில் 26,690 பேருக்கு...

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார். அவர் இது குறித்து தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2,000 ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்து அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. சமுர்த்தி பெறுவோர், முதியோர் கொடுப்பனவு பெறுவோர் மற்றும் மாதாந்த சம்பளத்தை பெறுவோர் 2,000 ரூபாவுக்கான பட்டியலில் இம்முறை சேர்க்கப்படவில்லை. ஊரடங்கு காலப்பகுதியில் நாளாந்த வருமானத்தை இழந்தவர்களுக்கே அரசாங்கத்தினால் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.அதன்படி நுவரெலியா மாவட்டத்தில் 26,690 பேருக்கான நிதியே ஒதுக்கப்பட்டு நிவாரணமாக 2,000 வழங்கப்பட்டு வருவதாகவும் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவின் ஊடாக கட்டம் கட்டமாக இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றார்.

ஜெனிவாவில் சாதக தீர்வு எட்டப்படும்...

விடயங்களையும், தெளிவுபடுத்தலையும் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் நான் செய்துள்ளேன்.

செப்டம்பர் 12ஆம் திகதி ஐ.நா மனித உரிமைப் பேரவை ஜெனீவா நகரில் கூடுகின்றது. செப்டம்பர் 21ஆம் திகதி ஐ.நா பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க் நகரில் கூடுகின்றது. இவ்விரண்டு மாநாடுகளிலும் நாம் எமது நாட்டிற்கான அனைத்து பயனையும் பெற எதிர்பார்க்கின்றோம்.

இதுகுறித்து நாம் நிச்சயம் கேட்க வேண்டிய கேள்விகள் சில உள்ளன. இன்று உலகில், குறிப்பாக தெற்காசிய வலயத்தில் பல்வேறு நெருக்கடிகள் உள்ளன. இந்த நிலைமை ஊடாக உலக மக்களுக்கு மேலதிகமான பாரதூரப் பிரச்சினைகளும் தலைதூக்குகின்றன. மனிதப்படுகொலை, குண்டு வெடிப்புகள், நிலையற்ற தன்மை, துப்பாக்கி, ஆயுதப் பிரச்சினைகள், அகதிகள், தீவிரவாதம் என பிரச்சினைகளும் இந்த வலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்களினால் ஏற்படுகின்றன.

இலங்கை என்பது அனைத்து நாடுகளுடனும் சிறந்த தொடர்பை வைத்துக்கொண்டு அமைதியாகஇருக்கின்ற நாடாகும். எமது நாட்டினால் ஏனைய நாடுகளுக்கோ, எவருக்கும் எந்தப் பிரச்சினையும் ஏற்பட வில்லை. எனினும் ஒவ்வொரு வருடமும் ஜெனீவாவில் இலங்கை பற்றி விமர்சித்து, பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றமை யிட்டு அதிர்ச்சியடைகின்றோம். இதற்கு உண்மையான காரணம் என்ன என்கின்ற பிரச்சினை எழுகின்றது. இதில் நீதி உள்ளதா? எடுகோள்கள் என்ன? பேச்சு நடத்தபல பிரச்சினைகள் உள்ள நிலையிலும் இலங்கையை தெரிவுசெய்து ஏன் இவ்வாறு பேச்சு நடத்துகின்றார்கள் என்கின்ற கேள்வியை நாம் கேட்க வேண்டும் .

உண்மையில் இது மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டதா? அல்லதுஅதற்கு அப்பாலான அரசியல் நிகழ்ச்சி நிரலா? ஐ.நா ஜெனீவா பேரவை கடந்த மார்ச் மாதத்தில் கூடியது.

இந்த 06 மாத இடைவெளியில் கொரோனா தொற்றின் கடுமையான நெருக்கடியை இலங்கை சந்தித்தது. அந்த காலகட்டத்திலும் அனைத்து துறைகளிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசாங்கத்தினால் முடிந்த நிலையில் மிகவும் திறந்த மனதில் அதன் தெளிவுகளையும் முன்வைப்பதே எமது அபிப்பிராயமாகவும் உள்ளது. எனவே எமது மக்கள் இந்த நிலைமையில் பாதுகாத்து முன்நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு நாம் எடுக்கின்ற இந்த முயற்சிகளுக்கு உதவியளிக்கும்படி அனைத்து நாடுகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

மகா சங்கத்தினர் உட்பட சர்வ மதத்தலைவர்களினதும் ஆலோசனைகளை நாங்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முக்கியத்துவமாகவே அவதானித்தோம் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக முதல்வருக்கு தனது...

உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் தொலைபேசியூடாக தொடர்புகொண்ட செந்தில் தொண்டமான் இவ்வாறு நன்றி தெரிவித்துள்ளார்.

'தமிழகத்தில் மறுவாழ்வு மையங்களில் தங்கியிருக்கும் இலங்கை தமிழர்களுக்கு புதிய வீடு குடியிருப்புகள், உட்கட்டமைப்பு வசதிகள், புலமைப்பரிசில், சுயதொழில் மற்றும் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுத்தல் போன்ற நலன்புரி திட்டங்களை முன்னெடுத்தமைக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றியை இந்த தொலைபேசி உரையாடலின்போது செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் வாழும் மலையக தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்தும் அவர் உரையாடியுள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்ட சகலரும்...

பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொவிட்19 தடுப்புக்கு ஒரே தீர்வு தடுப்பூசியை பெற்றுக் கொள்தென உலக சுகாதாரஅமைப்பு உறுதி செய்துள்ள பின்னணியில் இலங்கையும் நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்தும் தடுப்பூசியை தயாரிக்கும் நாடுகளிலிருந்து தடுப்பூசிகளை பாரிய ளவில் பெற்று தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றது என தெரிவித்துள்ள அவர்கள்,ஆனாலும் போலி சித்தாந்தவாதிகள் தமக்குரிய தடுப்பூசிகளை இதுவரை பெற வில்லை. அது கவலைக்குரிய விடயமாகும். வைரஸிலிருந்து பாதுகாப்பு பெற எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை உயர்மட்டத்தில் பேண வேண்டும். அதன் மூலம் மரண விகிதத்தை குறைப்பதே தடுப்பூசி வழங்களின் நோக்கமென்பதால் இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனடியாக அதனை பெற வேண்டும் என தடுப்பூசியை பெற்றுக் கொள்வது தொடர்பில் சர்வ மதத்தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அஸ்கிரிய பிரிவின் அனு நாயக்க வேண்டருவே உபாலி தேரர் தெரிவிக்கையில்,

கொவிட்19 இன, மத, கட்சி பேதமின்றி அனைவரது உயிருக்கும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில் யாராவது தொற்றை அரசியல் இலாபத்துக்காக மாற்றிக் கொண்டிருந்தால் அது கவலைக்குரிய விடயமாகும்.

இந்த கஷ்டமான நிலைமையில் கட்சி, எதிர்க்கட்சி அனைவரினதும் பொறுப்பு அனைத்து அரசியல் கொள்கைகளையும் புறந்தள்ளி தொற்றை கட்டுப்படுத்துவதற்கு தங்களது பங்களிப்பை வழங்க வேண்டியதாகும்.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பிக்குகள் பலர் மரணமடைந்துள்ளனர். அதேபோன்று ஏனைய மதத் தலைவர்களும் இறந்துள்ளனர். அரசியல் தலைவர்களும் இந் நிலைமைக்கு ஆளாகி உள்ளார்கள். இன மத கட்சி பேதமின்றி வைரஸ் தாக்குகின்றது. இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படாமல் இந்த சவாலில் வெற்றி பெற முடியாது. அரசங்கத்துக்கு போன்று மக்களுக்கும் பெரும் பொறுப்புண்டு. நாம்அனைவரும் தற்போதைய நிலைமையில் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியுள்ள என்று தெரிவித்துள்ளார்.

சர்வதேச இந்து சம்மேளன செயலாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் (பாபு சர்மா) தெரிவிக்கையில்,

ஜனாதிபதி உள்ளிட்ட அரசு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து நாட்டு மக்களை தொற்றிலிருந்து காப்பாற்ற பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. மக்களை இந்த தொற்றிலிருந்து விடுபடச் செய்து வளமான வாழ்வை சாதாரணமாக மேற்கொள்வதற்கும் தேவையான சூழலை ஏற்படுத்துவதே அரசின் தேவையாக உள்ளது. இந்த முயற்சியில் இன, மத, குல, கட்சி பேதமில்லை. அதனால் கிடைக்கும் முதற் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி போலி கருத்துகளுக்கு இடமளிக்காது இந்த தடுப்பூசியை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்யாவிட்டால் எமது மரணம் விரைவுபடுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்கான அனைத்து மத அமைப்பின் இணைத் தலைவர் அல்ஹாஜ் ஹஸன் மௌலானா தெரிவிக்கையில்,

இலங்கையில் மாத்திரமல்ல, உலக மக்கள் அனைவரும் கொவிட்19 தொற்று காரணமாக மரண பயத்தில் உள்ளார்கள்.இந்த கொவிட்19 தொற்றால் இலங்கை மட்டுமன்றி உலகின் பலம் வாய்ந்த வர்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டை இன, மத, குல பேதமின்றி இந்த தொற்றிலிருந்து காப்பாற்ற ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், சுகாதார பிரிவு, பாதுகாப்பு பிரிவு மற்றும் சுகாதார அதிகாரிகள் அனைவரும் மிகவும் அக்கறையுடன் சிரமமான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உலக சுகாதார அமைப்பு இது தொடர்பான நிபுணர்கள், மருத்துவர்கள் அறிமுகம் செய்துள்ள அனைத்து வகை தடுப்பூசிகளையும் மிகவும் சிரமப்பட்டு கொண்டு வந்து மக்களை காப்பாற்ற இந்த தடுப்பூசி வழங்கலை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. தற்போது இலட்சக்கணக்கான தடுப்பூசிகளை கொண்டு வந்துள்ளனர். அதனால் உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட நிபுணர்கள் அனுமதி அளித்துள்ள இந்த தடுப்பூசியை எவ்வித பயமும் சந்தேகமுமின்றி பெற்றுக்கொள்ளமுடியும். போலியான வதந்திகளை நம்பி நாட்டை பின்னோக்கி செல்ல விடாமல் இத் தடுப்பூசியை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த தடுப்பூசியை பெறுவதன் மூலம் மக்களின் உயிர் பாதுகாக்கப்படுவதோடு நாட்டையும் வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க முடியும். மதத் தலைவன் என்ற ரீதியில் நான் கூறுவது இஸ்லாம் மதத்துக்கு அமைய உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்திக் கொள்வது நரகத்திற்கு செல்லும் செயலாகும். நீங்கள் தடுப்பூசிக்கு பயந்து வதந்திகளுக்கு ஏமாந்து தடுப்பூசியை பெறாவிட்டால் நீங்கள் கொரோனாவுக்கு இரையாக வேண்டி நேரிடுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ நடவடிக்கைகள் தொடர்பான இணைப்பாளர், அருட்தந்தை கலாநிதி சிஸ்டர்ஸ் குருகுல சூரிய தெரிவிக்கையில்,

நாம் உண்பதற்கு நஞ்சற்ற உணவை தேடுகிறோம். மருந்தெடுக்க செல்லும் போது வைத்தியர் கொடுக்கும் மருந்தை எவ்வித பயமுமின்றி குடிக்கிறோம். ஆனால் சில மதக் கொள்கைகளில் அவ்வாறு செய்யக்கூடாதென கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனால் சிலர் இறந்து போகிறார்கள். பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

ஆனால் இறைவன் கொடுத்தது எல்லாம் மக்களின் நலனுக்காகத் தான். எல்லா மதங்களிலும் முதன்மையானது மக்களின் நலமே. நாம் சரியான நேரத்துக்கு உணவைப் பெற்று சுகாதாரத்தைப் பேணுவது போல இந்தத் தடுப்பூசியை எவ்வித பயமுமின்றி பெற்று பாதுகாப்பை பெறுவது அவசியமாகும். நாம் எதிர்கால சந்ததிக்காக வாழவேண்டும் என்பதால் முடிந்தளவு விரைவில் தடுப்பூசியை பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

4,100 மெ.தொன் ...

களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி 4,500 மெட்ரிக் தொன் சீனி மீட்கப்பட்டதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. நேற்று காலை அப்பகுதியில் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சீனி மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த களஞ்சியசாலை நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியின்றி முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமை கண்டறியப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தையில் சீனியின் விலை வெகுவாக அதிகரித்துச் செல்லும் நிலையில் சீனி இறக்குமதியாளர்கள் சீனிக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் சீனியைப் பதுக்கி வைத்திருப்பதாகவும் அதனை முறியடிக்க தொடர்ச்சியான சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.(ஸ)

தடுப்பூசி திட்டத்தை...

உபுல் ரோஹன தெரிவித்தார்.

இருப்பினும் சில வைத்தியசாலைகளில் பிரத்தியேகமாக தடுப்பூசி வழங்குவதற்குரிய வசதிகள் இல்லை என்பதனால் அவர்கள் மீண்டும் தற்காலிக நிலையங்களுக்கு திரும்புவதாகவும் அவர் கூறினார். ஆகவே அனைத்து வைத்தியசாலைகளிலும் கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான வசதிகள் இருக்க வேண்டுமென உபுல் ரோஹன குறிப்பிட்டார்.

இதேவேளை வெளிநாடு செல்ல விரும்புவோர் அதற்கு தேவையான ஆவணங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதமையின் காரணமாக தடுப்பூசியை பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் உபுல் ரோஹன தெரிவித்தார்.

ஆகவே தற்போதைய தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்பாக மீளாய்வு செய்து குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு அவர் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

உலக சாதனை வீரருக்கு...

வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். பிரிவினைவாதத்திற்கு எதிராக போராடி நாட்டை ஒன்றிணைக்கும் செயற்பாட்டில் தனது பொறுப்பை நிறைவேற்றிய இராணுவ வீரர் தினேஷ் பிரியந்த, 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் எமது தாய்நாட்டிற்கு வெண்கலப் பதக்கத்தை வென்றுக் கொடுத்தார். அதற்கமைய எமது நாட்டிற்கு இரண்டு ஒலிம்பிக் பதக்கங்களை வென்றுக் கொடுத்த ஒரேயொரு மற்றும் முதலாவது வீரர் தினேஷ் பிரியந்த ஆவார்.

கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்கொள்ள நேரிட்ட பல தடைகளை முறியடித்து நீங்கள் நாட்டிற்கு பெற்றுக்கொடுத்த இந்த வெற்றி ஒட்டுமொத்த தேசத்திற்கும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது. ஏனைய வீர வீராங்கனைகளும் தங்களது முழு திறமையை வெளிப்படுத்தி எமது தேசிய கொடியை உயர பறக்கச் செய்வதற்கு இந்த வெற்றி உதவும் என நம்புகின்றேன் என்றும் பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நம் உள்ளம் தூய்மையாகும் போது உலகமும் தூய்மையாகும்

மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ்

இதயத்தை தூய்மையாக்கும்போது, உலகமும் தூய்மையாகும் என பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிப்புற சடங்கு முறைகளை முன்னிறுத்தி இதயத்தையும் விசுவாசத்தையும் பின்னே தள்ளிவைப்பது மதவாதத்தின் ஆபத்தான வெளிப்பாடு என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

நம் வாழ்வின் துயர்களுக்கும் நம் குறைகளின் விளைவுகளுக்கும் பிறரை குற்றம்கூறும் மனநிலையிலிருந்து நாம் வெளிவர வேண்டும் என்றும் கடந்த ஞாயிறு மூவேளை செப உரையில் அழைப்புவிடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் சீடர்கள் கழுவாத கைகளால் உண்பதைக் கண்ட பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவிடம் அதுபற்றி குறைகூறியதையும் அதற்கு இயேசு அளித்த பதிலையும் மையப்படுத்தி வழங்கப்பட்ட கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் தொடர்பில் தன் செப வுரையில் விளக்கமளித்த திருத்தந்தை, மனிதனுக்கு உள்ளிருந்து வருபவையே அவனை அதிகம் மாசுபடுத்துகின்றன என்று கூறிய இயேசுவின் கருத்தை வலியுறுத்தினார்.

பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றாமல் உணவருந்திய சீடர்களின் செயல்களால் இடறல்பட்ட பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இவ்வாறு செய்வது பாரம்பரிய மதநடைமுறைகளுக்கு முரணானது (மாற் 7: 25) என எண்ணி இயேசுவிடம் புகார் செய்வதை காணும் நாம், இயேசுவும் அவருடைய சீடர்களும் ஏன் இந்த மரபுகளை புறக்கணிக்கிறார்கள்? என்ற கேள்வியை நம்மிடமே கேட்டுக்கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார் திருத்தந்தை.

பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவிடம் எடுத்தரைத்தது நல்ல தொரு பழக்கமே, ஆனால் இயேசுவோ, எல்லா நடைமுறைகளுக்கும் மையமாக விசுவாசத்தை சுட்டிக்காட்ட முயல்வதால் அவரின் பதில் வித்தியாசமாக இருக்கிறது என்பதை எடுத்துரைத்தார்.

வெளிப்புற சடங்கு முறைகளை முன்னிறுத்தி இதயத்தையும் விசுவாசத்தையும் பின்னே தள்ளிவைப்பது, மதவாதத்தின் ஆபத்தான வெளிப்பாடு என்பதை இயேசு சுட்டிக்காட்டுகிறார் என திருத்தந்தை தெளிவுபடுத்தினார்.

வெளிபுறத் தோற்றங்களால் அல்ல, மாறாக, இதயத்தைத் தொடும் விசுவாசத்தையே விரும்பும் இயேசு, மக்களை நோக்கி,"ஒரு மனிதனுக்கு உள்ளே செல்லும் விடயங்களால் அவனைத் தீட்டுப்படுத்த முடியாது; ஆனால் ஒரு மனிதனிடமிருந்து வெளியே வரும் விடயங்களே அவனைத் தீட்டுப்படுத்துகின்றன" (மாற் 7:15).

அத்துடன், "உள்ளிருந்து, அதாவது, இதயத்திலிருந்து" (மாற் 7:21) தீய விடயங்கள் பிறக்கின்றன, என இயேசு கூறும் வார்த்தைகள் புரட்சிகரமானவை, மற்றும் பழைய மரபுகளை தலைகீழாகப் புரட்டிப்போடுகின்றன எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

தீமை எப்போதும் வெளியிலிருந்தே வருகிறது என எண்ணிக்கொண்டு, மற்றவர்களை, சமுதாயத்தை, உலகத்தை குற்றஞ்சாட்டுவதில் நேரத்தை வீணடிக்கும்போது நம் கோபத்தாலும் கசப்புணர்வுகளாலும் கடவுளை நாம் நம் இதயத்திலிருந்து விலக்கி வைக்கிறோம் என்பதை குறிப்பிட்ட திருத்தந்தை கோபம், மனக்கசப்பு, சோகம் என்பவை இதயத்தில் எழும்போது கடவுளை நோக்கி திறக்கப்படவேண்டிய நம் மனக்கதவுகள் மூடப்படுகின்றன என்ற எச்சரிக்கையையும் விடுத்தார்.

மற்றவர்களை குறைகூறுவதிலிருந்தும், புகார்களால் உலகை மாசுபடுத்தி நேரத்தை வீணாக்குவதிலிருந்தும் நம்மை விடுவிக்குமாறு இறைவனை நோக்கி இறைவேண்டல் செய்வோம் என்ற அழைப்பையும் விடுத்தார் திருத்தந்தை.

நம் இதயத்தை உற்றுநோக்கும்போது, நாம் இவ்வுலகில் வெறுக்கின்ற அனைத்தையும் அங்கே காணலாம் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, நம் இதயத்தை தூய்மையாக்குவதன் வழியாக இவ்வுலகை தூய்மையாக்க நாம் உதவலாம் என எடுத்துரைத்து, மனத்தூய்மையின் வழியாக வரலாற்றையே மாற்றிய அன்னைமரியாளை அனைவருக்கும் எடுத்துக்காட்டாகவும் முன்வைத்து செப உரையை நிறைவுசெய்தார் திருத்தந்தை.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ்...

புனித அகுஸ்தினார்

இவ்வார புனிதர்

கிறிஸ்து பிறந்து மறைந்து கிறிஸ்துவ சமயம்நிலைபெறத் தொடங்கிய காலகட்டத்தில் அறியப்பட்ட இறையியலாளர்களில் ஒருவர் புனித அகஸ்டின்.

ஹிப்போவின் பிஷப் என்று அழைக்கப்படும் புனித அகஸ்டின் அல்ஜீரியாவைச் சேர்ந்தவர். ஆபிரிக்காவில் உரோமானிய ஆதிக்கத்தில் இருந்த பகுதி அது. விவிலியம் நடைமுறைக்கு வருவதற்குக் காரணமாக அவர் எழுதிய நூல்களான 'கன்பெஷன்ஸ்', 'சிட்டி ஒப் கோட்' என்பன கருதப்படுகின்றன.

புனித அகஸ்டினின் வாழ்வை வடிவமைத்த முக்கியமான சம்பவம் ஒன்றைத் தனது 'கன்பெஷன்ஸ்' நூலில் பகிர்ந்துள்ளார். பயனேயில்லாமல் சில வேளைகளில் பொய்களைச் சொல்கிறோம்.

தேவையேயற்றுச் சில பொருட்களைத் திருடுகிறோம். அந்தச் செயல்களுக்கான பின்னணி என்னவென்பதை நம்மால் அறிய முடிவதேயில்லை. அது தொடர்பான ஒரு சம்பவம்தான் புனித அகஸ்டின் வாழ்க்கையிலும் நடந்தது.

அகஸ்டின் தனது இளம் பருவத்தில், நண்பர்களோடு தெருவில் நடந்தபோது பேரிக்காய் தோப்பொன்றைப் பார்த்தார். அவருக்கோ பசியே இல்லை. ஆனாலும், குற்றம், குறும்பின் சுவையால் ஈர்க்கப்பட்டு பேரிக்காய் மரங்களில் பழுக்காத பேரிக்காய்களை நண்பர்கள் ஓடி ஓடிப் பறித்தனர்.

ஒவ்வொன்றாக உண்ட போது, பேரிக்காய்கள் கசந்தன. உடனடியாக வேறு வழியின்றி பேரிக்காய்களை பன்றிகளுக்குப் போட்டுவிட்டுச் சென்றனர். இந்தச் சம்பவத்துக்குக் காரணமென்னவென்று தனது நூலில் அகஸ்டின் ஆராய்கிறார்.

அன்பு கடவுளுக்குரியது. காமம் என்பது குற்றத்தால் அன்புக்குச் செய்யும் தொந்தரவு என்று அந்தச் செயலை விளக்குகிறார் அகஸ்டின்.

தானும் நண்பர்களும் சேர்ந்து திருடிய ஒவ்வொரு பேரிக்காயும் அன்பின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்கிறார். அன்பின் மீது நடத்தப்படும் எந்தத் தாக்குதலும் கடவுளைப் போல ஆகவிரும்பும் செயல்தான் என்கிறார்.

இப்படித்தான் நாம் செய்யும் பெரும்பாலான குற்றங்கள் பேரிக்காய் திருட்டைப் போலச் சிக்கல்களற்றவை. மிகச் சிறிய சந்தோஷங்களுக்காக நம் மதிப்பை இழக்கிறோம். புனித அகஸ்டின் பெரிய பலனே அற்ற, தூய்மையான குற்றம் ஒன்றில் சிறுவயதில் இறங்குகிறார். ஏவாள் செய்த குற்றத்தின் அளவுடன் ஒப்பிடும்போது அது பெரிய குற்றமல்ல. நல்லது, கெட்டதை அறியும் ஆசையும் அகஸ்டினுக்கு இல்லை. ஒரு குற்றத்தைச் செய்யும் சாகசம் மட்டுமே அந்தச் சிறுவனுக்கு இருந்துள்ளது.

அகஸ்டின் அந்தச் செயலின் விளைவிலேயே வீழ்ந்தும் போகவில்லை. அந்தச் செயலால் ஏற்பட்ட தெய்வீக நிம்மதியின்மைதான் அவரை இறைவனைத் தேடிப் போகவைத்தது. பேரமைதியையும் பெரும் நிம்மதியையும் அடைவதற்கு இதுபோன்ற சம்பவங்களும் தேவை என்பதை புனித அகஸ்டினின் வாழ்க்கை உணர்த்துகிறது. (ஸ)

புனித அன்னை தெரேசாவின் பிறந்த நாள்

உலக மக்கள் அனைவரது மனதிலும் என்றும் வாழும் நம் அன்னை தெரேசாவின் பிறந்த நாள் இம் மாதம் 26ஆம் திகதி நினைவு கூறப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையானது அன்னைக்கு புனிதர் பட்டம் வழங்கி அன்னையின் கருணைக்கு மேலும் அணி சேர்த்துள்ளது. "புன்னகையே அன்பின் சின்னம் அதுவே நாம் பிறருக்குக் கொடுக்கும் அழகிய பரிசு"

என்றுரைத்த அன்னை தெரேசா அதை தம் வாழ்வில் காட்டினார்.

"வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்" என்று சொன்ன அன்னை தெரேசா "இறக்கத் தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு வாழ்வோம்" என்று வாழ்க்கையின் யதார்த்தத்தை உலகத்திற்கு சொல்லித் தந்தவர். "நம் எல்லோராலும் பெரிய காரியங்களை செய்ய முடியாது ஆனால் நாம் சிறிய காரியங்களை பெரும் அன்போடு செய்யலாம்."என மனித வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பித்தவர் அன்னை தெரேசா.

எல்.செல்வா...

"நாம் நம்முடன் இருக்கும் நபர்களிடம் அன்பு செலுத்த முடியாமல் போனால் நம் கண்ணுக்குத் தெரியாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்" என அன்பின் மகத்துவத்தை கற்பித்தவர் அன்னை தெரேசா. "மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும்" என்ற அன்னை புறக்கணிக்கப்பட்ட, கைவிடப்பட்ட மக்களிடம் நெருங்கிப் பேசினார்.தமது அன்பையும் உதவியையும் வழங்கினார்.

"எதுவுமே நிரந்தரமில்லாத இந்த உலகில் உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரமாகும்? கவலையை விடுங்கள் வாழ்க்கையை முதலில் வாழத் தொடங்குங்கள்" என வறுமை நிலை மக்களுக்கு ஆறுதலையும் தைரியத்தையும் கொடுத்து கை தூக்கி விட்டவர் அன்னை தெரேசா.

கருவுற்றால் ஒரு குழந்தைக்கு மட்டும் தான் அன்னையாக முடியும். ஆனால் கருணையுற்றால் ஆயிரம் குழந்தைகளுக்குக்கூட அன்னையாக முடியும்" என்று சொன்ன அன்னை தெரசா அதை தம் வாழ்நாள் முழுதும் செயலில் காட்டினார்.

புனிதையாம் நம் அன்னைக்குக் கரம் குவிப்போம். மனதார கூறுவோம் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

அன்னை தெரேசாஆயிரமாயிரம் ஜென்மங்கள் இந்த பூமியில் பிறந்து அன்பையும் கருணையையும் உலகெங்கும் விதைக்க பிரார்த்திப்போம்.

"உள்ளவருக்கு கொடுக்கப்படும்"

இயேசு கூறும் தாலந்து உவமை

ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் பல்வேறுவிதமான திறமைகளை தந்துள்ளார். சுயநலத்துக் காகவன்றி பொது நன்மைக்கு ஏதுவாக அந்த திறமைகளை நாம் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

திறமைகள் ஒவ்வொருவருக்கும் பல விதமாக அமையலாம். எனினும் அந்தத் திறமைகளை பயன்படுத்தாமல் அவற்றைக் கிடப்பில் போட்டு வைத்து சுயநலத்துடன் பூமிக்குப் பாரமாய் வாழ்பவர்கள் தொடர்பில் அவர் கவலையடைகின்றார். அவர் ஒவ்வொருவருக்கும்

வழங்கியுள்ள திறமைகளை வைத்து அவர்கள் அதன் மூலம் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் எந்தளவு பயனுள்ளவர்களாக வாழ்கின்றார்கள் என்பதை ஆண்டவர் கண்காணிக்கின்றார்.

பரிசுத்த வேதாகமத்தின் மாற்கு நற் செய்தியில் 25 ஆம் அதிகாரத்தில் "உள்ளவர்களுக்கு கொடுக்கப்படும் இல்லாதவர்களிடமிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உவமை ஒன்றின் மூலம் தெரிவிப்பதைக் காணமுடிகிறது.

திறமையுள்ளவர்களுக்கு அதனை மென்மேலும் வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் வரப்பிரசாதங்களையும் ஆண்டவர் வழங்குகிறார். திறமைகளை வழங்கி அதனைப் பயன்படுத்தாமல் அதன் மூலம் தாமும் பிரயோசனமடையாமல் மற்றவர்களுக்கும் அதன் மூலம் பயனில்லாமல் வாழும் மனிதர்கள் தொடர்பில் அவர் காட்டும் எதிர்ப்பை இந்த நற்செய்தி வாசகம் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

மாற்கு நற்செய்தியில் குறித்த நற்செய்தி வாசகம் இவ்வாறு காணப்படுகின்றது, இயேசு தம் சீடருக்கு கூறிய இந்த உவமை விண்ணரசை பின்வரும் நிகழ்ச்சி வாயிலாகவும் விளக்கலாம் என்பதாக அமைந்துள்ளது.

"நெடும்பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடைமைகளை ஒப்படைத்தார். அவரவர் திறமைக்கேற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும், வேறு ஒருவருக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார்.



ஐந்து தாலந்தை பெற்றவர் போய் அவற்றைக்கொண்டு வணிகம் செய்து மேலும் ஐந்து தாலந்து ஈட்டினார். அவ்வாறே இரண்டு தாலந்து பெற்றவர் மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார். ஒரு தாலந்து பெற்றவரோ போய் நிலத்தைத் தோண்டி தம் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார்.

நெடுங்காலத்திற்குப் பின் அந்த பணியாளர்களின் தலைவர் வந்து அவர்களிடம் கணக்கு கேட்டார். ஐந்து தாலந்து பெற்றவர் அவரை அணுகி மேலும் ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து 'ஐயா ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்படைத்தீர் இதோ பாரும் இன்னும் ஐந்து தாலந்தை ஈட்டியுள்ளேன்' என்றார். இதற்கு அவருடைய தலைவர் அவரிடம் நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராக இருந்தீர் எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவராகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும் என்றார் .

இரண்டு தாலந்து பெற்றவரும் அவரை அணுகி ஐயா நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர் இதோ பாரும் மேலும் இரண்டு தாலந்து ஈட்டியுள்ளேன் என்றார். அவருடைய தலைவர் அவரிடம் நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராக இருந்தீர் எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உன் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும் என்றார்.

ஒரு தாலந்தைப் பெற்றுக்கொண்டவரும் அவரை அணுகி ஐயா நீர் கடின உள்ளத்தினர். விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர். நீர் தூவாத இடத்திலும் விளைச்சலை சேகரிப்பவர் என்பதை அறிவேன். உமக்கு அஞ்சியதால் நான் போய் உம் முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன் . இதோ பாரும் உம்முடையது என்றார் .

அதற்கு அவருடைய தலைவர் சோம் பேறியே பொல்லாத பணியாளனே நான் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவன் நான் தூவாத இடத்திலும் போய் சேகரிப்பவன் என்பது உனக்குத் தெரிந்திருந்தது அல்லவா அப்படியானால் என் பணத்தை நீ வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வர வேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன் என்று கூறினார். எனவே அந்த தாலந்தை அவனிடமிருந்து எடுத்து பத்து தாலந்து உடையவரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும் . அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லாதோரிடமிருந்து அவரிடம் உள்ளதும் எடுக்கப்படும். பயனற்ற இந்த பணியாளை புறம்பே உள்ள இருளில் தள்ளுங்கள் என்று அவர் கூறினார்".

திருமதி யோகராணி ஒகஸ்டின்...

காணி எடுத்தற் சட்டம்
(460ஆவது அத்தியாயம்)

33ஆம் பிரிவின் படியான அறிவித்தல்

எமது இல. KDS/PDB/4/3/10/217

காணி அமைச்சின் குறிப்பு இல. :- 4-3/7/2014/HW/111

கண்டி மாவட்டத்தில், பாத்தும்பர பிரதேச செயலாளர் டப்ளியு.எம்.டீ.டீ.கே வீரகோன் ஆகிய நான் 460ஆவது அத்தியாயம்) 33ஆவது பிரிவின் கீழ். கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ள காணியை மடவளை திகன வீதியை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் உரிமைப்படுத்திக் கொண்டுள்ளது.

இக் காணிக்கான உரிமையை எவரும் கோராததனால் காணி எடுத்தற் சட்டத்தின் பிரகாரம் இழப்பீட்டு தொகையின் பெயரளவு மதிப்பீட்டு பெறுமதியை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ள வழக்கு இலக்கங்களுக்கு தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பு செய்துள்ளமையை இத்தால் அறியத் தருகிறேன்)

அட்டவணை

வரிசை எண்	காணியின் பெயர்	முதல் வரைபட எண்	துண்டு எண்	பிரமாணம் ஹெக்டயார்	வர்த்தமானி இலக்கம்	வர்த்தமானி திகதி	இழப்பீட்டு தொகை	வழக்கு இலக்கம்
1	பள்ளியவத்த	6408	13	0.0103	2165/5	02.03.2020	ரூபா 1,000	LAD93/18
2	-	6408	95	0.0008	2164/55	27.02.2020	ரூபா 1,000	LAD89/18
3	-	6408	94	0.0001	2164/55	27.02.2020	ரூபா 1,000	LAD92/18
4	-	6408	93	0.0011	2165/5	02.03.2020	ரூபா 1,000	LAD88/18
5	-	6408	91	0.0004	2164/4	24.02.2020	ரூபா 1,000	LAD104/18
6	-	6408	90	0.0004	2164/4	24.02.2020	ரூபா 1,000	LAD99/18
7	பரகஹமுலவத்த	6408	43	0.0006	2165/5	02.03.2020	ரூபா 1,000	LAD94/18
8	உடுகன்னாவத்த	6408	61	0.0002	2164/55	27.02.2020	ரூபா 236,000	LAD44/17
9	உடுகன்னாவத்த	6408	74	0.0007	2165/5	02.03.2020	ரூபா 82,000	LAD57/18
10	உடுகன்னாவத்த	6408	73	0.0005	2164/55	27.02.2020	ரூபா 1,000	LAD 95/18
11	உடுகன்னாவத்த	6408	81	0.0001	2164/55	27.02.2020	ரூபா 1,000	LAD 96/18
12	உடுகன்னாவத்த	6408	84	0.0021	2164/4	24.02.2020	ரூபா 1,000	LAD 97/18
13	-	6408	88	0.0001	2164/55	27.02.2020	ரூபா 1,000	LAD 98/18
14	அரம்பே கெதரஹேன	6394	154	0.005	2161/4	03.02.2020	ரூபா 593,000	LAD 42/17(A)
15	-	6394	234	0.0012	2212/18	26.01.2021	ரூபா 1,000	LAD 84/18

டப்ளியூ.எம்.டி.டி.கே. வீரகோன்
பிரதேச செயலாளர்
பாத்தும்பர.

2021 மாதம் 20 திகதி

பெறுகை அறிவித்தல்

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சு

மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான கேள்வி கோரல் - 2021

ஊவா மாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழேயுள்ள உபகரணங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இவ் அமைச்சினால் விநியோகிக்கப்படும் கேள்வி மாதிரிப் பத்திரங்கள் மூலம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி மாதிரிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணங்களை இவ் அமைச்சிற்கு காசாக செலுத்தி உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

மருத்துவ உபகரணங்கள், கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளரிற்கு எழுத்துமூல விண்ணப்பத்துடன் உறுதி செய்யப்பட்ட பிரதியுடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

தொ. இல	உபகரணம்	அளவு	மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் (ரூபா)	மீளிக்கப்படும் கேள்விப் பிணை	
				காசாக எனில்	வங்கிப் பிணை மூலம் எனில்
01	02 Cylinders (jumbo)	100	3000	1%	2%
02	CPAP Machine	10			
04	Syringe pump	15			
05	Infusion pump	15			

கேள்வி மாதிரிப் பத்திரங்கள் 2021.09.01 முதல் 2021.09.22ஆம் திகதி பி.ப.2.00 வரை சாதாரண அலுவலக நேரங்களில் இவ் அமைச்சு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அத்துடன், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறு உறைகளில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மருத்துவ உபகரணங்களை வழங்குதல் 2021 என்று குறிப்பிட்டு 2021.09.22 பி.ப.2.00 இற்கு முன் தலைவர், பெறுகைக்குழு, ஊவா மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சு, ஆர்.எச்.குணவர்தன மாவத்த, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

2021.09.22 பி.ப.2.15இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக நிராகரித்தல் அல்லது அதன் ஒரு பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொள்ளல் பற்றிய முழுமையான அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உரியது.

தலைவர்,
அமைச்சு பெறுகைக்குழு,
சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சு,
ஆர்.எச்.குணவர்தன மாவத்தை, பதுளை.
2021.09.01ஆம் திகதி

ஏஎம்டிபிள்யூ கப்பிட்டல் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்ஸீ

நிதிக்கூற்று அறிக்கைகளின் பிரசுரம்

ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

ரூபா மில்லியனில்	நடைமுறை காலம் 2021	முன்னைய காலம் 2020
	01.01.2021 இலிருந்து 30.06.2021 வரை	01.01.2020 இலிருந்து 30.06.2020 வரை
வட்டி வருமானம்	683	847
வட்டிச் செலவு	(254)	(355)
தேறிய வட்டி வருமானம்	**428**	**492**
ஏனைய வருமானம்	167	113
தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக)	(237)	(203)
பெறுமதி இழப்பு	(141)	(138)
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**218**	**264**
வரிகள்*	(123)	(134)
வரிக்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)	**95**	**130**

* நேரடியற்ற வரிகள் (நிதிச்சேவை மீதான பெ.சே.வ போன்ற) மற்றும் நேரடி வரிகள் (நிறுவன வருமான வரி) உள்ளடங்கலாக

ஜூன் 30இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

ரூபா மில்லியனில்	30.06.2021 இல் உள்ளவாறு	30.06.2020 இல் உள்ளவாறு
சொத்துக்கள்		
காசு மற்றும் வங்கி மீதிகள்	327	496
அரச பிணையங்கள்	664	244
கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக)	7,742	9,082
பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள்	2	2
சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்	19	20
ஏனைய சொத்துக்கள்	249	132
மொத்தச் சொத்துக்கள்	**9,002**	**9,977**
பொறுப்புக்கள்		
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	2,937	3,067
தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை	-	822
வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள்	2,089	2,075
ஏனைய பொறுப்புக்கள்	926	1,212
மொத்தப் பொறுப்புக்கள்	**5,952**	**7,177**
பங்குரிமை மூலதனம்		
கூறப்பட்ட மூலதனம்	200	200
நியதி ஒதுக்கு நிதியம்	147	132
பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள்	2,702	2,466
ஏனைய ஒதுக்குகள்	1	1
மொத்த பங்குரிமை மூலதனம்	**3,050**	**2,800**
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமைப் பங்கு	**9,002**	**9,977**
பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி	**153**	**140**

குறிப்பு: கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

விடயம்	30.06.2021 இல் உள்ளவாறு		30.06.2020 இல் உள்ளவாறு	
ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)	உண்மை	தேவையானது	உண்மை	தேவையானது
அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம்	29.22%	7.00%	23.66%	6.50%
மொத்த மூலதன போதுமை விகிதம்	31.25%	11.00%	24.35%	10.50%
வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம்	146.03%	10.00%	134.92%	10.00%
கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)				
மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம்	10.46%		7.44%	
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	2.11%		1.61%	
மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	6.01%		5.59%	
ஒதுக்கு பாதுகாப்பு விகிதம்	91.18%		78.19%	
இலாபத்தன்மை (%)				
தேறிய வட்டி இலாபம்	10.19%		10.55%	
சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்)	4.84%		5.30%	
பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பின்)	6.25%		9.29%	
வருமானத்திற்கான செலவு விகிதம்	40%		34%	
திரவத்தன்மை (%)				
தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%)	648%		461%	
வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள்	17%		13%	
விஞ்ஞாபனத் தகவல்கள்				
கிளைகளின் எண்ணிக்கை	15		15	
சேவை நிலையங்களின் எண்ணிக்கை	7		7	
வெளிவாரி கொடுகடன் தரமிடல் (பிட்ச் தரப்படுத்தல்)	AA-(lka)*		BBB - (lka)	

* நிறுவனத்தின் கடன் மதிப்பீடு .ிபிட்ச் மதிப்பீடுகளால் 09 ஆகஸ்ட் 2021 அன்று AA- (lka) இலிருந்து A (lka) ஆக மறுசீரமைக்கப்பட்டது.

உறுதிப்படுத்தல்:

ஏஎம்டபிள்யூ கப்பிட்டல் லீஸிங் மற்றும் பினான்ஸ் பீஎல்ஸீ நிறுவனங்களின் பணிப்பாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர்-நிதி மற்றும் இணக்கத் தலைவர் ஆகிய நாங்கள் இணைந்து மேல் குறிப்பிடப்பட்டவை உண்மையானவை என்று கீழே கையொப்பமிட்டு உறுதிசெய்கின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

சாமத் முனசிங்க (ஒப்பம்)
பணிப்பாளர்/ தலைமை நிறைவேற்று அதிகாரி

ஷெனுக்க ஜயரட்ன (ஒப்பம்)
பொது முகாமையாளர் - நிதி

ரொசெல் சில்வா (ஒப்பம்)
இணக்கத் தலைவர்

30-07-2021

ஏஎம்டிபிள்யூ கப்பிட்டல் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்ஸீ
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி - 011 2 309 300

Fitch Rating A (lka)

கம்பனி பதிவிலக்கம். PB 14 PQ
2011ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் அடிப்படையில் மத்திய வங்கியின் நாணயச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றது

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
11
2021 ஓகஸ்ட் 31
செவ்வாய்க்கிழமை

கௌதாரிமுனை மக்களுக்கு இடர்கால உலர் உணவுப்பொதி

அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

கௌதாரிமுனை பிரதேச மக்களுக்கு கொவிட்19 இடர்காலத்தைச் சமாளிப்பதற்கு உதவும் வகையிலான உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, கௌதாரிமுனையைச் சேர்ந்த 137 குடும்பங்களுக்கும் தலா 3,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப் பட்டன.

கௌதாரிமுனையில் பிரதேச மக்களினால் அமைக்கப்பட்டு வருகின்ற கடலட்டைப் பண்ணைகளுக்கான ஆரம்ப முதலீடுகளை மேற்கொள்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சுகத் இன்டர்நஷனல் நிறுவனத்தினர், குறித்த உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

கௌதாரிமுனை விநாயகர் கடற்றொழிலாளர் சங்கத் தலைவரின் தலைமையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் இராசலிங்கம், இந்த உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வை ஒருங்கிணைத்திருந்தார்.

சுகத் இன்டர்நஷனல் நிறுவனத்தின் பிரதிநிதியான சுபாஷ் தலைமையில் உலர் உணவுப் பொதிகள் எடுத்துவரப்பட்டு, பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் மற்றும் கௌதாரிமுனை பரமங்கிராய் கிராம சேவையாளர் ராஜகோபால் ஆகியோரின் பங்கேற்புடன் வழங்கி வைக்கப்பட்டன.

கௌதாரிமுனை, விநாசியோடை மற்றும் மண்ணித்தலை பகுதிகளில் தனித்தனியாக கொவிட் சுகாதார வழிமுறைகளின்படி இந்த உதவிப்பொருள் விநியோகம் செயயப்பட்டன.

கௌதாரிமுனை கிராமத்தை பொருளாதார ரீதியில் முன்னேற்றும் வகையில், அந்தக் கிராமத்தின் விநாயகர் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 52 கடற்றொழிலாளர்களுக்கு கடலட்டைப் பண்ணைகளை வழங்க ஏற்பாடு செய்த கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவினால் கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சுகத் இன்டர்நஷனல் நிறுவனத்தினர்,

தமது கடமைகளின் ஒரு பகுதியாக, கடற்றொழிலாளர் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர். இதற்கு மேலதிகமாக, கௌதாரிமுனை பகுதி மக்கள் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு சுமார் 100 ஏக்கர் காணியை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நல்லூர் முத்துக்குமார சுவாமி தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளல்

யாழ். விசேட நிருபர்

திருக்கார்த்திகை திருவிழாவான ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் முத்துக்குமார சுவாமி தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி அருள் காட்சி அளித்தார். வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 17ஆம் திருவிழாவான ஞாயிற்றுக்கிழமை திருக்கார்த்திகை திருவிழாவாகும்.

அதனை முன்னிட்டு அன்றைய தினம் மாலை அழகிய அலங்காரத்தில் முத்துக்குமார சுவாமி தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளினார்.

கொரோனோ தொற்று காரணமாக ஆலயத்தினுள் பக்தர்கள் எவரும் அனுமதிக்கப்படாத நிலையில் , திருவிழாக்கள் அனைத்தும் உள்வீதியிலையே நடைபெற்று வருகின்றன.

அதேவேளை ஆலய நிர்வாகம் ஆலய திருவிழாக்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக நேரடியாக ஒலிபரப்பு செய்து வருகின்றது.

இரு நபர்களுடன் 183 கிலோ 715 கிராம், கேரளா கஞ்சா மன்னாரில் கைப்பற்றப்பட்டது

தலைமன்னார் விஷேட நிருபர்

மிகவும் சூட்சயமான முறையில் இந்தியாவிலிருந்து மன்னார் ஊடாக கடத்திவரப்பட்ட கேரளா கஞ்சாவை கொண்டு செல்லப்பட்ட வாகனமும் சந்தேக நபர்களும் முருங்கன் பகுதியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ் சம்பவம் சனிக்கிழமை (28.08.2021) இடம்பெற்றுள்ளது.

இவ் சம்பவம் தொடர்பாக பொலிசார் தெரிவிக்கையில்,

வங்காலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஐ.சுமணவீரவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ளவீரசிங்கவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராட்சி மற்றும் முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லயனல், பொலிஸ் பரிசோதகர் குமார, உதவி பொலிஸ் பரிசோதகர் உப்பாலி சென விரத்ன, மற்றும் உதவி பொலிஸ் பரிசோதகர் திசானாயக தலைமையிலான அணியினரே இவ் கடத்தலை முறியடித்தனர்.

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருங்கன் பிரதான வீதியின் பொலிசாரின் வீதிதடை சோதனையில் குறிப்பிட்ட கூலரை சோதனையிட்டபோது அதலிருந்து 183கிலோ 715 கிராம்,கேரளா கஞ்சா போதைப்பொருள் மறைத்து கொண்டு சென்றபோதே கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது அத்துடன் இது தொடர்பாக கண்டி மற்றும் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் கூலர் வாகனம் என்பன மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

வவுனியாவில் 2000 ரூபாய் கொடுப்பனவு வழங்கி வைப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா பிரதேச செயலக பிரிவுகுட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் நிவாரணமாக 2000 ரூபாய் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஊரடங்கினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியாவில் 17 ஆயிரத்து 270 குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளனர். அதற்காக 16 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் முதற்கட்டமாக 8 ஆயிரம் குடும்பங்களிற்கு அந்த நிதியினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக வவுனியா, உக்குளாங்குளம், பண்டாரிக்குளம் மற்றும் ரகுபாக்கம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 350 குடும்பங்களுக்கு 2000 ரூபாய் கொடுப்பனவு அப்பகுதி கிராம அலுவலரினால் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன், வைரவபுளியங்குளம், இறம்பைக்குளம், வவுனியா நகரம் உள்ளிட்ட பல்வேறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு பெற்ற காணிக்கு இழப்பீடு பெற்றுக் கொடுக்க கூட்டமைப்பு தவறிவிட்டது

கோப்பாய் குறூப் நிருபர்

முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் எம்பி தெரிவிப்பு

யாழ்ப்பாண விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டபோது விமான நிலையத்துக்காக பெறப்பட்ட தனியார் காணிகளுக்கான இழப்பீட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை என வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவன் குற்றஞ்சாட்டினார்.

பலாலி விமான நிலையம் என முன்னர் அழைக்கப்பட்ட யாழ்ப்பாண விமான நிலையம் 1950 -1984 வரையான காலப்பகுதியில் விஸ்தரிப்புக்காக இரண்டு கட்டங்களாக தனியாருக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

1950-1960 காலப் பகுதியில் விமான நிலையத்திற்காக சுமார் 349 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டதாக தெரியவரும் நிலையில் காணிகளை இழந்த சுமார் 716 பேரில் 215 பேருக்கு மட்டு இழப்பீடுகள் கிடைக்கப் பெற்றதாக அறியக் கிடைத்தது.

1984ஆம் ஆண்டு விசேட வர்த்தமானி மூலம் விமான நிலையத்திற்காக இரண்டாம்கட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக பொதுமக்களின் சுமார் 64 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. இந்நிலையில் சுமார் 397பேரின் பெயர்கள் இழப்பீட்டுக்காக உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் வடக்கு மாகாண ஆளுநராக நான் பதவி வகித்த போது வலி வடக்கு மீள் குடியேற்றப் பகுதிகளில் முப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் மற்றும் மீள் குடியேற வேண்டியவர்களின் விபரங்கள் தொடர்பில் பதிவுகள் சேகரிக்கப்பட்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் ஆசியுடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் விமான நிலையத்தை விஸ்தரிக்க ஆரம்பித்தபோது கூட்டமைப்பினர் நினைத்திருந்தால் காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீட்டைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும்.

நான் ஆளுநராக இருந்தபோது யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான கலந்துரையாடலில் விமான நிலையக் காணி இழப்பீடு தொடர்பில் கொழும்புக்கு முழு விவரங்களும் கிடைக்காதது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலக அதிகாரிகளைக் கேட்டிருந்தேன்.

சிலர் கேட்கக் கூடும் நீங்கள் அப்போது ஆளுநராக ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருந்தீர்கள் ஏன் அதனைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என?

அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா வலி வடக்கில் சுமார் 2000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை தனது நேரடி உத்தரவின் மூலம் விடுவித்தார்.

விமான நிலையத்துக்கான சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடரில் நிர்வாக ரீதியான நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆகவே அக்காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் கூட்டமைப்பின் ஆசியுடன் பொறுப்பேற்ற முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை அதிக பொறுப்புக்களை வைத்திருந்ததன் காரணமாக அதனை நிறைவேற்ற முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 33 பேருக்கு கொரோனா

கரவெட்டி தினகரன் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 33 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை 267 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு, முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் 06 பேர், வெலி ஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர், மல்லாவி ஆதார வைத்திய சாலையில் 03 பேர், யாழ்.மாவட்டத்தில் 11 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 02 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02பேர், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிரலில் ஒருவர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழில் கொரோனாவுக்கு ஒரே வாரத்தில் 31 பேர் பலி!

மொத்த உயிரிழப்பு 229

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 31 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தின் கொவிட்19 புள்ளிவிவர அறிக்கையின் அடிப்படையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஓகஸ்ட் 22 முதல் 28 வரையிலான 07 நாட்களில் இவ்வாறு 31 கொவிட்19 மரணங்கள் யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

ஓகஸ்ட் மாதத்தில் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்கள் தொடர்பான விவரம் வருமாறு:

ஓகஸ்ட் 02இல் 04 பேர், ஓகஸ்ட் 03 இல் 02 பேர், ஓகஸ்ட் 04 இல் 02 பேர், ஓகஸ்ட் 06 இல் 02 பேர், ஓகஸ்ட் 07 இல் பேர், ஓகஸ்ட் 08 இல் 03 பேர், ஓகஸ்ட் 09 இல் 03 பேர், ஓகஸ்ட் 10 இல் 06 பேர், ஓகஸ்ட் 11இல் 05 பேர், ஓகஸ்ட் 12 இல் 04 பேர், ஓகஸ்ட் 13 இல் 05 பேர், ஓகஸ்ட் 14 இல் 07 பேர், ஓகஸ்ட் 15 இல் 03 பேர், ஓகஸ்ட் 16 இல் ஒருவர், ஓகஸ்ட் 17 இல் 02 பேர், ஓகஸ்ட் 18 இல் 06 பேர், ஓகஸ்ட் 19 இல் ஒருவர், ஓகஸ்ட் 20 இல் 05 பேர், ஓகஸ்ட் 21 இல் 03 பேர், ஓகஸ்ட் 22 இல் 02 பேர், ஓகஸ்ட் 23 இல் ஒருவர், ஓகஸ்ட் 24 இல் 06 பேர், ஓகஸ்ட் 25 இல் 06 பேர், ஓகஸ்ட் 26 இல் 07 பேர், ஓகஸ்ட் 27 இல் 04 பேர், ஓகஸ்ட் 28 இல் 05 பேர்,

இதன் மூலம் இந்த மாதத்தின் முதல் 28 நாட்களிலும் 98 கொவிட் 19 மரணங்களும் பதிவாகியுள்ளன. இதையடுத்து யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட் 28 வரையில் கொவிட் 19 காரணமாக உயிரிழந்துள்ளவர்களது எண்ணிக்கை 229 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழில் 2ஆவது தடுப்பூசி வழங்கல்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட் 19 தடுப்பூசியின் முதலாவது அலகைப் பெற்றுக் கொண்டவர்களுக்கான இரண்டாவது அலகை வழங்கும் பணி நேற்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது.

வடமாகாணத்தில் கொவிட்19 தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3ஆம் கட்டத்தின் முதலாவது தடவை தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த கடந்த ஜூலை மாத இறுதி முதல் நடைபெற்று வந்தன.

அவ்வாறு தமது முதலாவது அலகு தடுப்பூசியினை பெற்றுக் கொண்ட 30 வயதிற்கு மேற்பட்ட வர்கள், 18 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கான இரண்டாவது அலகு தடுப்பூசிகள் நேற்று முதல் வழங்கப்படுகிறது.

அந்நிலையில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழான ஜே / 111 , ஜே / 112, ஜே / 114 மற்றும் ஜே 122 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட வர்களுக்கு திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயத்தில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

கல்முனை சுகாதார பிரிவில் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்

அரச உத்தியோகத்தர்கள்,பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

பெரியநீலாவணை தினகரன் நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை எல்லைக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலய பிரிவு மற்றும் ஏனைய விசேட நிலையங்களில் நேற்று முதல் (30) இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் மும்முரமாக தடுப்பூசி பெற்றுக் கொள்ளுவதனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

சுகாதார திணைக்கள வைத்தியர்கள், தாதிகள், முப்படையினர், பட்டதாரி பயிலுனர்கள், பிரதேச சமூக சேவை அமைப்புக்கள் அடங்கிய குழுவினர் இந்த இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் மற்றும் பாடசாலைகளில் ஏற்றி வருகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனைக்குட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இந்த இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை, பெரியநீலாவணை பிரதேசத்தவர்களுக்கான முதலாம் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கு இராண்டாம் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம், 30 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை நான்கு கட்டங்களாக மருதமுனை, கல்முனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில் இடம்பெற்ற வருவதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை பிரதேசத்தவர்கள் அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, அல் பஹ்ரியா தேசிய பாடசாலை, அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயம், அல் அஸ்கர் வித்தியாலயம் ஆகியவற்றிலும் நற்பிட்டிமுனை மக்கள் அல் அக்ஸா வித்தியாலயத்திலும், பெரியநீலாவணை பிரதேசத்தவர்கள் புலவர் மணி சரிபுத்தீன் வித்தியாலயத்திலும், மருதமுனை பிரதேசத்தவர்கள் அல்மனார் மத்திய கல்லூரி, அல் மதீனா வித்தியாலயம் ஆகியவற்றிலும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

கடன் இல. : IDA-66210

பணியின் தலைப்பு : கிழக்கு மாகாணத்திலுள்ள அணைகள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்கான சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டம் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக பரிசீலனை அறிக்கைகள் தயாரிப்பதற்கான ஆலோசனை சேவை

குறிப்பீட்டிலக்கம் : LK-MOMDE-138821-CS-CQS

இலங்கை சனநாயக, சோஷலிசக் குடியரசானது உலக வங்கியிடமிருந்து ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கான கிரயச் செலவுகளுக்கான நிதி வசதியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை ஆலோசனை சேவைகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் - கிழக்கு மாகாண அணைகள் மற்றும் கால்வாய்களுக்கான சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டம் மற்றும் சுற்றாடல் சமூக பரிசீலனை அறிக்கை ஆகியவை தயாரிப்பதற்கான ஆலோசனை சேவையில் (சேவை) அடங்குகின்றன. மதிப்பீடு செய்யப்பட்ட செயற்படுத்தல் காலம் ஆறு மாதங்கள் என்பதுடன் எதிர்பார்க்கப்படும் பணியின் தொடக்க காலம் 2021 ஒக்டோபர் மாதமாகும். இந்த சேவையின் மேலதிக விவரங்கள் குறிப்பு விதி முறைகளில் (TOR) விவரிக்கப்பட்டுள்ளன.

பணிக்கான குறிப்பு விதி முறைகளை www.iwwrmp.lk/advertisements எனும் இணையதளத்தில் தேடிப் பார்க்கலாம்.

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் இப்போது சேவைகளை வழங்குவதில் ஆர்வம் காட்ட தகுதியான ஆலோசனை நிறுவனங்களை (ஆலோசகர்கள்) அழைக்கிறது. ஆர்வமுள்ள ஆலோசகர்கள் சேவைகளைச் செய்வதற்குத் தேவையான தகுதிகள் மற்றும் பொருத்தமான அனுபவம் இருப்பதை நிரூபிக்கும் தகவலை வழங்க வேண்டும்.

தேவைப்படும் ஆவணங்கள்

ஆர்வமுள்ள நிறுவனங்கள் தங்கள் தகுதிகளுக்கான ஆதாரமாக பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய தொடர்புடைய விவரங்களை வழங்கலாம்.

(i) ஆலோசனை நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு கொள்ளும் தகவல்.

(ii) நிறுவனத்தின் முக்கியப் பணியாளர்களின் பெயர்கள் மற்றும் அவற்றின் கடந்த கால அனுபவத்தை உள்ளடக்கிய குறுகிய சுய தரவுகள் (CV) (தயவு செய்து காலம் முழுவதும் முக்கிய ஊழியர்கள் கிடைப்பதை உறுதி செய்க)

(iii) நிறுவனத்தின் உரிமைத்துவம் மற்றும் பதிவு.

(iv) கடந்த 5 வருடங்களுக்கான நிதி நிலை அறிக்கைகள்.

(v) நீர்ப்பாசன உட்கட்டமைப்பு புனர்வாழ்வு பணிகள் தொடர்பான வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் கடந்த 7 ஆண்டுகளில் (ஆலோசனை மதிப்பு உட்பட) மேற்கொள்ளப்பட்ட ஒத்த பணிகளின் விளக்கத்தின் பட்டியல்.

(vi) சிற்றேடுகள், இறுவட்டுகள் (CD) போன்றவை.

தகவுத்திறன் குறும்பட்டியல்: நிறுவனத்தின் துறை சார்ந்த தகுதிகள் மற்றும் அனுபவம், பிரதான வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வருடங்கள், தொடர்புடைய அனுபவம், நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக திறன் போன்றவை. முக்கிய நிபுணர்களின் தகுதிகள் மற்றும் அனுபவம் ஆகியவை குறுகிய பட்டியலிடும் தகவுத்திறனில் சேர்க்கப்படும்.

2020 நவம்பர் மாத உலக வங்கியின் "IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்" பிரிவு III, பந்திகள், 3.14, 3.16 மற்றும் 3.17 மற்றும் உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டுக் கொள்கை என்பவற்றை ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனத்திற்கு முன்வைக்கின்றது.

ஆலோசகர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்த ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம், ஆனால் சங்கம் ஒரு கூட்டு முயற்சி மற்றும் / அல்லது உப-ஆலோசனையின் வடிவத்தில் உள்ளதா என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஒரு கூட்டு முயற்சியைப் பொறுத்தவரை, கூட்டு நிறுவனத்தில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழு ஒப்பந்தத்திற்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பானவர்களாவர்.

பெறுகை ஒழுங்குவிதிகளில் உள்ள ஆலோசகரின் தகுதித் தேர்வு (CQS) முறைக்கு ஏற்ப ஒரு ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும்.

மேலதிக தகவல்களை திட்ட பணிப்பாளரிடமிருந்து பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். (+94 112691163)

ஆர்வ வெளிப்பாடுகளை எழுத்து வடிவில் திட்டப் பணிப்பாளருக்கு பின்வரும் முகவரிக்கு 2021 செப்டம்பர் 14ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும்.

திட்ட முகாமைத்துவப் பிரிவு,
ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்,
திட்ட பணிப்பாளரின் கவனத்திற்கு,
2 வது மாடி, மகாவலி நிலையம்,
இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,
கொழும்பு - 07, இலங்கை.

தொலைபேசி : + 94-112691163
தொலைநகல் : + 94-112691163
மின்னஞ்சல் : iwwrmp@sltnet.lk

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

திட்ட முகாமைத்துவ பிரிவு

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

கடன் இல. : IDA-66210

பணியின் தலைப்பு : வட மாகாண சபை அணைகள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்கான சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டம் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக பரிசீலனை அறிக்கைகளை தயாரிப்பதற்கான ஆலோசனை சேவை

குறிப்பீட்டிலக்கம் : LK-MOMDE-162977-CS-CQS

இலங்கை சனநாயக, சோஷலிசக் குடியரசானது உலக வங்கியிடமிருந்து ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கான கிரயச் செலவுகளுக்கான நிதி வசதியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை ஆலோசனை சேவைகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் - வட மாகாண அணைகள் மற்றும் கால்வாய்களுக்கான சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டம் மற்றும் சுற்றாடல் சமூக பரிசீலனை அறிக்கை ஆகியவை தயாரிப்பதறகான ஆலோசனை சேவையில் (சேவை) அடங்குகின்றன. மதிப்பீடு செய்யப்பட்ட செயற்படுத்தல் காலம் ஆறு மாதங்கள் என்பதுடன் எதிர்பார்க்கப்படும் பணியின் தொடக்க காலம் 2021 ஒக்டோபர் மாதமாகும். இந்த சேவையின் மேலதிக விபரங்கள் குறிப்பு விதிமுறைகளில் (TOR) விவரிக்கப்பட்டுள்ளன.

பணிக்கான குறிப்பு விதிமுறைகளை www.iwwrmp.lk/advertisements எனும் இணையதளத்தில் பார்வையிடலாம்.

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் இப்போது சேவைகளை வழங்குவதில் ஆர்வம் காட்ட தகுதியான ஆலோசனை நிறுவனங்களை (ஆலோசகர்கள்) அழைக்கிறது. ஆர்வமுள்ள ஆலோசகர்கள் சேவைகளைச் செய்வதற்குத் தேவையான தகுதிகள் மற்றும் பொருத்தமான அனுபவம் இருப்பதை நிரூபிக்கும் தகவலை வழங்க வேண்டும்.

தேவைப்படும் ஆவணங்கள்

ஆர்வமுள்ள நிறுவனங்கள் தங்கள் தகுதிகளுக்கான ஆதாரமாக பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய தொடர்புடைய விபரங்களை வழங்கலாம்.

(i) ஆலோசனை நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் தொடர்புகொள்ளும் தகவல்.

(ii) நிறுவனத்தின் முக்கியப் பணியாளர்களின் பெயர்கள் மற்றும் அவற்றின் கடந்த கால அனுபவத்தை உள்ளடக்கிய குறுகிய சுய தரவுகள் (CV) (தயவுசெய்து காலம் முழுவதும் முக்கிய ஊழியர்கள் கிடைப்பதை உறுதிசெய்க)

(iii) நிறுவனத்தின் உரிமைத்துவம் மற்றும் பதிவு.

(iv) கடந்த 5 வருடங்களுக்கான நிதிநிலை அறிக்கைகள்.

(v) நீர்ப்பாசன உட்கட்டமைப்பு புனர்வாழ்வு பணிகள் தொடர்பான வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் கடந்த 7 ஆண்டுகளில் (ஆலோசனை மதிப்பு உட்பட) மேற்கொள்ளப்பட்ட ஒத்த பணிகளின் விளக்கத்தின் பட்டியல்.

(vi) சிற்றேடுகள், குறுந்தகடுகள் போன்றவை.

தகவுத்திறன் குறும்பட்டியல்: நிறுவனத்தின் துறை சார்ந்த தகுதிகள் மற்றும் அனுபவம், பிரதான வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வருடங்கள், தொடர்புடைய அனுபவம், நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக திறன் போன்றவை. முக்கிய நிபுணர்களின் தகுதிகள் மற்றும் அனுபவம் ஆகியவை குறுகிய பட்டியலிடும் தகவுத்திறனில் சேர்க்கப்படும்.

2020 நவம்பர் மாத உலக வங்கியின் "IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்" பிரிவு III, பந்திகள், 3.14, 3.16 மற்றும் 3.17 மற்றும் உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டுக் கொள்கை என்பவற்றை ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனத்திற்கு முன்வைக்கின்றது.

ஆலோசகர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்த ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம், ஆனால் சங்கம் ஒரு கூட்டு முயற்சி மற்றும் / அல்லது உப-ஆலோசனையின் வடிவத்தில் உள்ளதா என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஒரு கூட்டு முயற்சியைப் பொறுத்தவரை, கூட்டு நிறுவனத்தில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழு ஒப்பந்தத்திற்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பானவர்களாவர்.

பெறுகை ஒழுங்குவிதிகளில் உள்ள ஆலோசகரின் தகுதித் தேர்வு (CQS) முறைக்கு ஏற்ப ஒரு ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும்.

மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளரிடமிருந்து பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். (+94 112691163)

ஆர்வ வெளிப்பாடுகளை எழுத்து வடிவில் திட்டப் பணிப்பாளருக்கு பின்வரும் முகவரிக்கு 2021 செப்டம்பர் 14ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும்.

திட்ட முகாமைத்துவப் பிரிவு,
ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்,
திட்ட பணிப்பாளரின் கவனத்திற்கு,
2 வது மாடி, மகாவலி நிலையம்,
இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை.

தொலைபேசி : + 94-112691163
தொலைநகல் : + 94-112691163
மின்னஞ்சல் : iwwrmp@sltnet.lk

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் மாணவி சாதனை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட (Civil Engineering) இறுதியாண்டில் கல்வி பயின்ற மட்டக்களப்பு வெல்லாவெளியைச் சேர்ந்த செல்வி. நிஷாங்கனி கௌரி காந்தன் எனும் மாணவி 125 மாணவர்களுக்கிடையில் இறுதியாண்டுப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் கல்வி பயிலும் இப் பல்கலைக்கழகத்தில் மட்டக்களப்பு மாணவி ஒருவர் முதல் இடத்தைப் பெற்று சாதனை படைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இவர் ஆரம்பக் கல்வியினை பட்டிருப்பு தேசிய பாடசாலையிலும், இடைநிலை உயர்தரக் கல்வியினை மட்/ வின்சன்ட் மகளிர் தேசிய கல்லூரியிலும் பயின்றவராவார். இவர் ஆசிரியர்களான கௌரிகாந்தன், சரஸ்வதிதேவி ஆகியோரின் புதல்வி ஆவார்.

மூதூரில் முதியோர் கொடுப்பனவு வீடு, வீடாகச் சென்று கையளிப்பு

(மூதூர் தினகரன், திருமலை மாவட்ட விசேட, கந்தளாய் மூதூர் தினகரன், தோப்பூர் குறூப் நிருபர்கள்)

திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சீ.அருள் செல்வத்தின் பணிப்பின்பேரில் மூதூர் தபாலகத்தில் முதியோர் கொடுப்பனவுகள் அவர்களின் வீட்டுகளுக்கு கொண்டு சென்று கையளிக்கப்பட்டது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் உள்ளதால் உதவித் தபால் அதிபர் எம். எம்.றிசாட் மற்றும் காரியாலய உதவியாளரின் மூலம் பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இவ்வாறான முதியோர் கொடுப்பனவுகள் வீடு, வீடாகச் சென்று கையளிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு பயனாளிகள் நன்றிகளை தெரிவித்தனர்.

ஊரடங்கை மீறுவோருக்கு எதிராக வழக்கு தாக்கல்

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட மற்றும் மீன் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், பிரதான பொலிஸ் பரிசோதகருமான டபிள்யு.எம்.எஸ். சி. விஜயதுங்க தெரிவித்தார்.

அக்கரைப்பற்று நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மற்றும் மீன் வியாபாரிகள், வீதிகளில் நடமாடியவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஊரடங்குச் சட்டத்தை மீறி சட்டவிரோதமாக வீதிகளில் உலாவுபவர்கள் அனுமதிப்பத்திரமின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தெரிவித்தார்.

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ

2021 ஜூன் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள்

Co.Reg.

வருமானக் கூற்று

	01/01/2021 இருந்து 30/06/2021 வரை (ரூ.மி)	01/01/2020 இருந்து 30/06/2020 வரை (ரூ.மி)
வட்டி வருமானம்	2,714	2,585
வட்டிச் செலவு	1,386	1,973
தேறிய வட்டி வருமானம்	**1,328**	**612**
வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)	21	-
ஏனைய வருமானம்	96	74
தொழிற்பாட்டு செலவினங்கள்	(1,113)	(989)
பெறுமதி இழப்பு	(163)	(157)
வரிக்குமுன்னரான இலாபம்/ (நட்டம்)	**169**	**(460)**
வருமான வரிகள்	(29)	-
வரிக்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)	**140**	**(460)**

நிதி நிலைமைக் கூற்று

	30/06/2021 இல் உள்ளவாறு (ரூ.மி)	30/06/2020 இல் உள்ளவாறு (ரூ.மி)
சொத்துக்கள்		
காசு மற்றும் வங்கி மீதிகள்	830	845
அரச பிணையங்கள்	2,237	2,272
தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை	222	253
கடன்கள்	26,942	27,129
பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள்	747	1,209
முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் ஆதன விற்பனைகள்	348	424
ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டுக்குரிய சொத்துக்கள்	620	818
கட்புலனாகாச் சொத்துக்கள்	131	164
ஏனைய சொத்துக்கள்	349	336
மொத்தச் சொத்துக்கள்	**32,426**	**33,450**
பொறுப்புக்கள்		
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	3,598	3,580
தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை	3,922	3,224
வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள்	21,488	22,356
ஏனைய கடன்பாடுகள்	650	643
ஏனைய பொறுப்புக்கள்	1,159	1,498
மொத்தப் பொறுப்புக்கள்	**30,818**	**31,302**
பங்குரிமை		
கூறப்பட்ட மூலதனம்	2,124	2,124
நியதிகள் ஒதுக்க நிதியம்	235	235
பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள்	(754)	(207)
ஏனைய ஒதுக்கங்கள்	3	(4)
மொத்த பங்குரிமை	**1,608**	**2,148**
மொத்தப் பொறுப்புகள் மற்றும் பங்குரிமை	**32,426**	**33,450**
பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி	**9.69**	**12.95**

தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

விடயம்	30/06/2021இல் உள்ளவாறு		30/06/2020இல் உள்ளவாறு	
ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)	**உண்மை**	**தேவையானது**	**உண்மை**	**தேவையானது**
அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம்	3.97%	6.50%	4.68%	6.50%
மொத்த மூலதன போதுமை விகிதம்	4.52%	10.50%	6.38%	10.50%
வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம்	8.68%	10.00%	13.21%	10.00%

விடயம்	30/06/2021இல் உள்ளவாறு	30/06/2020இல் உள்ளவாறு
கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)		
மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம்	16.44%	16.98%
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	6.54%	8.19%
மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம்	132.52%	122.43%
ஒதுக்கு பாதுகாப்பு விகிதம்	50.78%	40.52%
இலாபத்தன்மை (%)		
தேறிய வட்டி எல்லை	8.19%	3.81%
சொத்துக்கள் மீதான வருவாய்	1.04%	-2.75%
பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்	17.45%	-42.80%
வருமானத்திற்கான செலவு விகிதம்	88.32%	167.02%
திரவத்தன்மை (%)		
தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%)	146.66%	124.03%
வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள்	8.76%	7.44%
விஞ்ஞாபனத் தகவல்கள்		
கிளைகளின் எண்ணிக்கை	48	49
வெளிவாரி கொடுகடன் தரமிடல்	ICRA ''(SL) BBB+ (Negative Outlook)	ICRA ''(SL) BBB+ (Negative Outlook)
ஒழுங்குபடுத்தல் வைப்புகள்/கடன் வழங்கல் கட்டுப்பாடுகள்		
மொத்த வைப்புகளின் உச்ச வரம்பு (ரூபா. பில்.)	23	23
மொத்த கடன் வழங்கல் போர்ட்போலியோ உச்சவரம்பு (ரூபா. பில்.)	35	35

உறுதிப்படுத்தல்:

கீழே கையொப்பமிட்டுள்ள மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சீயின் பிரதான நிறைவேற்று அலுவலராக, நிதிக் கட்டுப்பாட்டாளராக மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்)
P.I. கன்தனாரச்சி
நிதித் தலைவர்
அதிகாரி,
திகதி: 27/08/2021

(ஒப்பம்)
H. K. D. W. M. D. K. ஹப்புஹின்ன
பிரதான நிறைவேற்று

திகதி: 27/08/2021

(ஒப்பம்)
W.S.M.பெர்ணாண்டோ
(ஒப்பம்) இணங்குவிப்பு அலுவலர்
திகதி: 27/08/2021

மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் பினான்ஸ் பீஎல்சீ,
(இலங்கை வங்கியின் துணை நிறுவனம்)

இலங்கை வங்கி மேர்ச்சன்ட் டவர்,
இல. 28, சென் மைக்கல் வீதி, கொழும்பு 03, இலங்கை

தொ.பே: 011-4711711 Fax: 011-4711765
மின்னஞ்சல்: mbslbank@mbslbank.com
இணையதளம்: www.mbslbank.com

ASSOCIATED MOTOR FINANCE CO.PLC – PB 733 PQ

கூட்ட அறிவித்தல்

ASSOCIATED MOTOR FINANCE COMPANY PLC இன் ஆண்டுப் பொதுக்கூட்டம் 2021 செப்டெம்பர் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.30 க்கு இல. 146, ஹவலொக் வீதி, கொழும்பு-05, இலங்கையில் ஒரு மெய்நிகர் கூட்டமாக நடைபெறும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

பின்வரும் நோக்கங்களுக்கானது:

01. சபையின் ஆண்டு அறிக்கை மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கையுடன், 2021 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற நிதி ஆண்டுக்கான கணக்காய்வுக்கு உட்பட்ட நிதி நிலை அறிக்கைகள் பரிசீலிக்கப்படுவதோடு ஏற்கப்படும்.
02. அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் திகதி வரை 2022 மார்ச் 31 ஆம் திகதிக்கு முடிவுறும் நிதி ஆண்டுக்காக நன்கொடைகளை தீர்மானிக்க பணிப்பாளர்களுக்கு அதிகாரம் அளித்தல்.
03. சங்கத்தின் உறுப்புரைகளின் D 35 (5) உறுப்புரையின் விதிகளில் சுழற்சி முறை மூலம் ஓய்வுபெறும் திரு டீ.ஜி. கண்டம்பி அவர்களை நிறைவேற்றுனர் அல்லாத பணிப்பாளர் ஒருவராக மீண்டும் தேர்வு செய்தல்.
04. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 158 ஆவது பிரிவின் விதிகளில் கணக்காய்வாளர்களாக மீள் நியமிக்கப்பட்டதாக கருதப்படும் கணக்காய்வாளர்கள், Messrs, SJMS கூட்டாளிகள், பட்டய கணக்காளர்களின் ஊதியத்தை தீர்மானிப்பதற்கு பணிப்பாளர்களுக்கு அதிகாரம் அளித்தல்.
